விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 347 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 15 வியாழக்கிழமை (01.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே



அரசியல் தீர்வு விடயத்தில்

## தமிழ்த் தரப்புகள் இடையே ஒற்றுமை காணப்பட வேண்டும்

சபையில் செல்வம் அடைக்கலநாதன்

(கொழும்பு)
தோல்வியடைந்த மாவட்ட அபிவிருத்தி சபை முறைமையா இனப்பிரச்சினைக்கு தீர்வு? அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ் தரப்பினர் முதலில் ஒற்றுமையாக செயற்பட வேண்டும்.

தமிழ் அரசியல் கட்சிகளிடம் ஒற்றுமையில்லை. ஆகவே தீர்வு சாத்தியமற்றது 15

## யாழில் 7 பேருக்கு மலேரியா தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த வருடம் ஏழு பேர் மலேரியா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த ஏழு பேரும் மலேரியா தொற் 15

## முட்டை விலை ரூ.75 வரை உயரலாம்

(கொழும்பு)
அரசாங்கம் தலையிடாவிட்டால் எதிர்காலத்தில் முட்டை ஒன்றின் விலை 75 ரூபாயைத் தாண்டும்என அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர முட்டை உற்பத்தி 15

# நிபந்தனையின்றி செல்வது அர்த்தமற்றது

## ரணிலுடனான பேச்சுவார்த்தை தொடர்பில் விக்னேஸ்வரன் எம்.பி கருத்து



(கொழும்பு)
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ள தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு பேச்சு வார்த்தையில் நிபந்தனை இன்றி பங்கேற்றால், அது கடந்த காலங்களைப் போன்று அர்த்தமற்றதாகவே இருக்கும் என விக்னேஸ்வரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## புலோலியில் வியாபாரி சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
புலோலியில் வெற்றிலை வியாபாரி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் புலோலி 15

அரச ஊழியர்களின்

## ஆடை தொடர்பான சுற்றறிக்கை இரத்து

(கொழும்பு)
அரச உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ ஆடை தொடர்பான சுற்றறிக்கைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

அதன்படி, கோவிட் தொற்று பரவலின்போது வசதியான ஆடைகளுடன் பணிக்கு வருமாறு அரசாங்க ஊழியர்களுக்கு அறி 15

## 2023ஆம் ஆண்டு மின்கட்டணத்தை உயர்த்த அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)
ஓகஸ்ட் மாதம் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டபோதிலும், மின்சார சபையின் நஷ்டத்தை ஈடுகட்ட இது போதாது எனவும், எனவே கட்டணத்தை மேலும் அதிகரிப்பதற்கான கோரிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, 2023 ஜனவரி மற்றும் ஜூன் மாதங்களில் இரண்டு கட்டங்களாக மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும், அதற்கமைய இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் மின்சார 15

## இலங்கைக்கான பிரித்தானிய தூதுவருடன் யாழ்.மாநகர முதல்வர் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)
இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் சரா ஹலூன் நேற்று புதன்கிழமை யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணனை சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ் . மாநகர 15

லங்கா சதொசவினால்

## நான்கு அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பு

(கொழும்பு)
நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் நான்கு அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகளை குறைக்க தீர்மானித்துள்ளதாக லங்கா சதொச தெரிவித்துள்ளது.

அதற்கமைய ஒரு கிலோகிராம் நெத்தலி கருவாட்டின் விலை 150 ரூபாயாலும் சிவப்பு பச்சை அரிசி 6 ரூபாயாலும் கீரிச் சம்பா 15 ரூபாயாலும் பெரிய வெங்காயம் 30 ரூபாயாலும் குறைக் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னையின் மடியில்
07 – 11 – 1956



ஆண்டவன் அடியில்
28 – 11 – 2022

## திரு. சீவரத்தினம் உமாபதி

( முன்னாள் யாழ். பல்கலைக்கழக பணியாளர் )

யாழ். கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடா (Toronto வை) வதிவிடமாகவும் கொண்ட சீவரத்தினம் உமாபதி அவர்கள் கடந்த 28.11.2022 (திங்கட்கிழமை) சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - பொன்னம்மா, முத்தையா - நாகம்மா தம்பதியரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற சீவரத்தினம் - மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற குமாரவேலு - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரி அவர்களின் ஆருயிர்க் கணவரும் காலஞ்சென்றவர்களான ந. புவனேஸ்வரி, து. பாக்கியலட்சுமி, வே.மு.பேரம்பலம் ஆகியோரின் உறவுமுறை பெறாமகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - செல்வரட்ணம், செல்லத்தம்பி - தேவராசா ஆகியோரின் உறவுமுறை மருமகனும் உருத்திரபதி, திருப்பதி, உமாமகேஸ்வரன், சிவபதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சோபிகன், லதுவன் ஆகியோரின் உறவுமுறைப் பெரியப்பாவும் தமிழினி, நீதிராசா ஆகியோரின் உறவுமுறை மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் இன்று (01.12.2022) வியாழக்கிழமை 3.30 மணியளவில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(13627)

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல் :-
எஸ்.உருத்திரபதி (சகோதரன்)
(முன்னாள் பணியாளர் -நல்லூர் ப.நோ.கூ. சங்கம் )

# கண்ணீர் அஞ்சலி



யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின்
வழிகாட்டலும் ஆலோசனையும் சேவை ஆசிரியர்
திருமதி **சு. டானியேல் றஞ்சித்** அவர்களின்
அன்புத் தாய்

## திருமதி மனோகரன் பத்மாவதி

அவர்கள் கடந்த 25.11.2022 (வெள்ளிக்கிழமை) இறைபதம் எய்தினார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(13636)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை

# 6ஆம் ஆண்டு நினைவுகளில்...

## அமரர் நாகலிங்கம் புவனேந்திரன்



தோற்றம் : 25.02.1950
மறைவு : 07.12.2016

திதி : பூர்வபக்க அட்டமி

அன்பின் உருவமாய்
பண்பின் சிகரமாய் உயர்ந்து
ஆலமர விருட்சமாய் நிழல் தந்து
பாசமுடன் எமையெல்லாம் வளர்த்து
கூடியிருந்த நாட்கள் ஒவ்வொன்றும்
குதூகலமாய் இருந்து விட்டு
எமையெல்லாம் பரிதவிக்கவிட்டு
எங்கு சென்றீர் ஆறாண்டு
கடந்து சென்றதப்பா நீர் சென்று
ஆறுமோ எம் துயர்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(13614)

முருகமூர்த்தி வீதி,
நெல்லியடி.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்

# அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு



கடந்த 01.11.2022 செவ்வாய்க்கிழமை அன்று
இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி
அமரர்

## கந்தசாமி தங்கரெட்ணம் (பரமேஸ்வரி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (29.11.2022) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (01.12.2022) வியாழக்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(13633)

இல. 27, கச்சேரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

सत्यमेव जयते

## CONSULATE GENERALA OF INDIA JAFFNA

## இந்தியத் துணைத் தூதரகம் யாழ்ப்பாணம்

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின், கச்சேரி - நல்லூர் வீதியில் அமைந்துள்ள **"இந்தியா இல்லத்தில்"** தோட்டப் பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்காக, இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட புகழ்பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த தோட்டப் பராமரிப்பு சேவை வழங்குநர்களிடமிருந்து கூறு விலைகளை கோருகின்றது. விண்ணப்பதாரர்கள் தங்கள் கூறுவிலைகளை பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ **16 டிசெம்பர் 2022 திகதி 15:00 மணி வரை சமர்ப்பிக்கலாம்.** கூறுவிலைகளை கோரும் அறிவிப்பின் மேலதிகவிவரங்கள் கீழே தரப்படும் இணையதளங்களில் உள்ளன.

https://eprocure.gov.in/epublish/app
and
http://cgijaffna.gov.in/

மேலதிக விபரங்களுக்கு hoc.jaffna@mea.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள் அல்லது 021-222-0501 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

(C-5373)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்து மதத்தின் தனித்துவத்தை பாதுகாப்பது தொடர்பில் அரசு ஆராய வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

**இந்தியாவுடன் ஒப்பிடும்போது இலங்கையில் இந்து மதத்தின் தனித்துவத்தை எவ்வாறு பாதுகாக்க முடியும் என்பதை அரசாங்கம் ஆராய வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்துக்கள் மட்டுமன்றி பௌத்த விகாரைகளிலும் இந்து தெய்வங்களை வழிபடுகின்றார்கள்.

உதாரணமாக யாழ்ப்பாணத்தில் சிவ வழிபாடு பொதுவானது என்பது போல தெற்கில் விஷ்ணு, கந்தன், பத்தினி உள்ளிட்ட ஏராளமான இந்து தெய்வங்களை வழிபடுகின்றனர்.

இந்தியாவில் உள்ள இந்து மதத்தைவிட இலங்கையில் உள்ள இந்து மதத்தின் தனித்துவம் குறித்து ஒரு அறிக்கையை தொகுக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

அதேபோல், இலங்கை வரலாற்று ஆய்வு நிறுவனமொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

வரலாற்றை மறந்து விடுகிறோம் என்றும் எனவே, வரலாறு குறித்த அறிவையும் ஆராய்ச்சியையும் முன்னெடுப்பதற்காக இந்த நிறுவனம் செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (நி)



தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஒரு தொகுதி மருந்துப் பொருட்கள் நேற்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டன.

# 21 ஆயிரம் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு

## சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

நாட்டில் 21 ஆயிரம் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு உள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தற்போதைய கணக்கெடுப்புகளின்படி, இந்த விடயம் குறித்து தெரிய வந்ததாக அவர் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

இந்த எண்ணிக்கை 40 ஆயிரமாக உயரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனவே, அதனை தடுப்பதற்கான விரைவான தீர்வுகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (நி)

# தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு 'றோ' தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

தமிழ் சிறுபான்மையினருக்கான சமஷ்டி தீர்வு உட்பட 1987 முதல் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தையும் இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும் என இந்தியாவின் றோ அமைப்பின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கேட்டுக் கொண்டார்

றோவின் தலைவர் சமந் குமார் கோல் இலங்கையில் வர்த்தக திட்டங்களின் மூலம் ஆழமாக கால்பதித்துள்ள சீனா தனது திட்டங்களை விஸ்தரிப்பதால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

இந்திய பிரதமரை சந்திப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் மேற்கொண்ட மறைமுக முயற்சிகளின் மத்தியிலேயே இந்தியாவின் றோவின் தலைவரின் விஜயம் இடம்பெற்றுள்ளது என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழ் மக்கள் எதிர் கொண்டுள்ள பிரச்சினைகளிற்கு தீர்வை காண்பதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட தயார் என ஜனாதிபதி கடந்த வாரம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# புலமைப்பரிசில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆசான் பப்ளிகேசன் நிறுவனத்தினால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள யாழ்.மாவட்ட மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 1 மணிவரை இடம்பெறவுள்ளது என நிறுவனத்தின் முகாமையாளர் அறிவித்துள்ளார். (4-6)

# அரச ஊழியர்களைப் போன்று ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படாது

(கொழும்பு)



அரச உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கும் முறைப்படி ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படமாட்டாது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

டிஜிற்றல் கல்விக்கான பிரதான திட்டத்தின் வரைபை சமர்ப்பிக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச ஊழியர்களை இடமாற்றம் செய்வது போன்று ஆசிரியர்களையும் இடமாற்றம் செய்தால் பிள்ளைகளுக்கான பாடங்களை உள்ளடக்குவதில் சிக்கல்கள் ஏற்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எனவே, அரச ஊழியர்களைப் போன்று ஆசிரியர்களை இடமாற்றம் செய்யாமல் மாணவர்களின் தேவைகளை கருத்திற்கொண்டு அவர்களை உரிய முறையில் இடமாற்றம் செய்ய கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் சுசில் தெரிவித்தார். (நி)

# தேர்தல்களை தாமதமின்றி நடத்தவேண்டும் தேசிய சமாதானப் பேரவை கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையிலான இடைவெளியை இல்லாமல் செய்ய உள்ளூராட்சி தேர்தல்களையும் மாகாண சபை தேர்தல்களையும் தாமதமின்றி நடத்த வேண்டும் என்று இலங்கை தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக பேரவை "அரசியல் உறுதிப்பாட்டை உத்தரவாதம் செய்ய தேர்தல்களே ஜனநாயக வழி" என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறது.

தற்போதைய தருணத்தில் பொருத்தமானவர்கள் என்று தாங்கள் கருதுகின்ற பிரதிநிதிகளை ஜனநாயக முறையில் மக்கள் தெரிவுசெய்து தங்கள் விருப்பங்களை வெளிப்படுத்த தேர்தல்கள் வழிவகுக்கும். இது பொருளாதாரத்தை மீட்டெடுக்க எடுக்கப்பட வேண்டியவை என்று அரசாங்கம் கருதும் தீர்மானங்களுக்கு ஒரு வழிகாட்டலாகவும் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் சுமைகளை பாரப்படுத்தவும் உதவும்.

உள்ளூராட்சி தேர்தல்கள் ஒரு வருடமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. சட்டரீதியாக ஒத்திவைப்பதற்கான காலமும் உச்சப்பட்சத்துக்கு வந்து விட்டது. அந்த தேர்தல்களை நடத்த வேண்டியது அவசியமாகும்.

ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்படும் மாகாணசபைகள் ஆட்சிமுறையின் சுமைகளை பகிர்ந்துகொள்ளும். மாகாண சபைகளின் மூலமான அதிகாரப்பரவலாக்கல் நாட்டில் இன அமைதியை மேம்படுத்தும் நோக்குடனேயே கொண்டு வரப்பட்டது.

தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதன் காரணமாக மாகாணங்கள் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆளுநர்களினால் இப்போது நிர்வகிக்கப்படுகின்றன. இது அதிகாரப்பரவலாக்கலை ஏளனம் செய்வதாக அமைகிறது. நாட்டின் 75 ஆவது சுதந்திரதினம் அளவில் தமிழர்களைப் பாதிக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்று அண்மையில் ஜனாதிபதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலகிருஷ்ணன் வெற்றிக்கிண்ணம்
# மானிப்பாய் பரிஸ் அணி 3 ஆவது போட்டியில் வெற்றி



பாலகிருஷ்ணன் வெற்றிக் கிண்ண தொடரின் 3 ஆவது போட்டியில் மானிப்பாய் பரிஸ் அணி, சிறிகாமாட்சி அணியை 48 ஓட்டங்களால் வெற்றி பெற்று காலிறுதி முன் போட்டிக்கு தெரிவாகியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் அணி 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 113 ஓட்டங்களை பெற்றது.குகபிரசாத்-32,பானுஜன்-12,கிருஷாந்தன் ஆட்டமிழக்காது-34, சுபதீபன்- 19, ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் சிறிகாமாட்சி அணியை சார்ந்த தயாதீபன் 04 ஓவர்களில் 13 ஓட்டங்களை கொடுத்து 02 விக்கெட்டுகளையும் நிரூபன் 3.4 ஓவர்களில் 15 ஓட்டங்களை கொடுத்து 04 விக்கெட்டுகளையும் நிரூஜன் 04 ஓவர்களில் 20 ஓட்டங்களை கொடுத்து 02 விக்கெட்டுகளையும் மோகனப்பிரியன் 2 ஓவர்களில் 19 ஓட்டங்களை கொடுத்து 01 விக்கெட்டினையும் கைப் பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிறிகாமாட்சி அணி 17.2 ஓவர்களில் சகல விக்கெட்டு களையும் இழந்து 65 ஓட்டங்களை பெற்றது.

துவாரகன்-18, தர்ஸன்-14, சிலக்ஸன்-14 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் பரிஸ் அணியை சார்ந்த கனிஸ்ரன் 2.2 ஓவர்களில் 2 ஓட்டங்களை கொடுத்து 02 விக்கெட்டுகளையும் பானுஜன் 4 ஓவர்களில் 15 ஓட்டங்களைக் கொடுத்து 01 விக்கெட்டினையும் டயான் 03 ஓவர்களில் 15 ஓட்டங்களை கொடுத்து 01 விக்கெட்டினையும் யாழினி 03 ஓவர்களில் 11 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் வருடாவருடம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு மானிப்பாய் பரிஸ் அணி 4.61 புள்ளிகளையும் சிறிகாமாட்சி அணி 1.65 புள்ளிகளையும் பெற்றன. (4-6)

# உதைபந்தாட்ட தொடர் சமநிலையில் நிறைவு






வடமாகாண வீரர்களின் திறமையை வெளிக் கொண்டு வரும் நோக்குடனும் இராணுவ.பொதுமக்களின் உறவை பலப்படுத்தும் நோக்குடன் இராணுவத் தளபதி வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட தொடர் கடந்த ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

குறித்த போட்டியின் இறுதிப்போட்டி கடந்த 28 ஆம் திகதி மாலை கிளிநொச்சியில் அமைந்துள்ள வடமாகாண விளையாட்டு கட்டடத் தொகுதி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் மற்றும் கிளிநொச்சி இரணைமாதா நகர் சென்மேரீஸ் விளையாட்டுக்கழக அணிகள் மோதியிருந்தன.

ஆட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இரண்டு அணிகளும் கோல்களைப்பெறும் நோக்குடன் சிறப்பாக விளையாடியிருந்தன எனினும் இறுதியில் 1:1 என்ற கோல் கணக்குடன் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.(4-6-316)

# மரண அறிவித்தல்



## திரு. பாலச்சந்திரன் லலித்
( கிராமசேவையாளர் - கட்டைவேலி J/369 )

களஞ்சியந்தோட்டம் கட்டைவேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் பெருந்தெரு புலோலி தெற்கு புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. பாலச்சந்திரன் லலித் அவர்கள் நேற்று (30.11.2022) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலச்சந்திரன் - ஈஸ்வரி தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற மயூரகிரிநாதன் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் பாமினி (ஆசிரியை - யா/ தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு கணவரும் அக்சரா (தரம் 5 மாணவி - யா/வடஇந்து மகளீர் ஆரம்பப் பாடசாலை) அவர்களின் அன்புத் தந்தையும் வினோத் (லண்டன்), ரஜிதா ஆகியோரின் பாசமிகு அண்ணனும் கிந்துஜா, சிவமூர்த்தி (பொலிஸ் உத்தியோகத்தர்), கேதுஷா, சிவோத்தமன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அஸ்விகன், ஆகிசன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.12.2022) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் (பெருந்தெரு புலோலி தெற்கு, புலோலி) நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் தகனக் கிரியைக்காக ஆணைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வதியும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-5383)

வினோத் - 00447803875288
சிவோத்தமன் - 00447534860693
சிவமூர்த்தி - 077 842 4542

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-06 பிளைச்சர் ஒழுங்கை 23/6ம் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் "சொந்தக்காரர்" என்ற பெயரில் எமது பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் சொர்னசிதம்பரம் கைம்பெண் நேசரெத்தினம் 04.03.1970ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜோன் பற்றிக் முகதாவில் 3322ம் இலக்கத்தில் நிறைவேற்றிய நன்கொடை உறுதி மூலம் அந்தோனிப்பிள்ளை பெண் செல்வபாக்கியம் என்பவரிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை அந்தோனிப்பிள்ளை கைம்பெண் செல்வபாக்கியம் 01.12.2002 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 874ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் சீதனமாக சூரியகுமார் கிறிஸ்தோப்பர் பெண் ஜடா சசிரேகாவுக்கு சீதனமாக ஈகை செய்துள்ளனர்.

கிறிஸ்தோபர் பெண் ஜடா சசிரேகா அற்றோனிக் தத்துவக்காரரான இலக்கம் 16/6 புதிய வீதி மட்டக்களப்பு அரசகோன் சார்ள்ஸ் அரியரட்ணம் மூலம் குறித்த ஆதனத்தை 28.11.2020ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு நா.கோவர்த்தனன் முகதாவில் 60ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் டேவிட் றொபின்சனும் பெண் பவப்பிரியாவுக்கு கைமாற்றியுள்ளார்.

குறித்த 60ம் இலக்க உறுதியில் கணவர் கையொப்பமிடாமையினால் 01.02.2021 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கோவர்த்தனன் முகதாவில் 71ம் இலக்கத்தில் உறுதிப்படுத்தல் உறுதியினை நிறைவேற்றியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை டேவிட் றொபின்சனும் பெண் பவப்பிரியாவும் 2ம் பகுதியராக இராசநாயகம் அன்ரன் ராஜ்குமாரும் 21.02.2021 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு நா.கோவர்த்தனன் முகதாவில் 77ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட பிரிவிடல் உறுதி மூலம் பிரிவிடல் செய்யப்பட்டது.

**ஆதன அட்டவணை:-**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று, யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், யாழ்ப்பாண மாநகரசபை, கிராம அலுவலர் பிரிவு ஈச்சமோட்டை J/66 சுண்டுக்குளி இறை.

**"பிரம்படியிற்புலம் வயலும் பிரம்படியில் பள்ளம் வயலும் பிரம்படியில் பள்ளமும்"** நிலப்பரப்பு 1 குளி 16.51 ஆனால் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.புஸ்பராஜா அவர்களால் 2002.12.17 ம் திகதி 1156ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட நில அளவைப்படத்தில் துண்டு 1.2 எனச் சுட்டப்பட்ட நிலப்பரப்பு 1 குளி 16.510 ஆனால் இது மீண்டும் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.அருள்நேசன் அவர்களால் 2020.11.24 ம் திகதி 3937A ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட நில அளவைப்படத்தில் துண்டு 1.2 எனச்சுட்டப்பட்ட நிலப்பரப்பு 1 குளி 16.24 இதில் துண்டு 2 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு பூச்சியம் குளி பதினேழு தசம் ஒன்று இரண்டும் நில.பர 0 குளி 17.12 உடைந்த வீடும் இதற்கெல்லை

கிழக்கு-ஞானபூரணம் அந்தோனிப்பிள்ளையின் ஆதனம்
வடக்கு-குறித்த படத்தில் துண்டு 1
மேற்கு -ஒழுங்கை
தெற்கு - துரைராஜா பெண் மலரின் ஆதனம் இதடங்கலும்

தற்போது பிரிவிடல் செய்யப்பட்டதின்படி டேவிட் றொபின்சனும் பெண் பவபிரியாவும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/முழுவதற்கும் உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது டேவிட் றொபின்சனும் பெண் பவபிரியாவும் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**முதல்வர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(சி-5371)



தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவத் தலைவர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.
(படம்-சிவசாந்தன்)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-10 கண்டி வீதி, ஆதன இல. 182 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆதனப்பதிவேட்டில் முத்தையா சிவநாதன் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கண்டி வீதி, இல. 182 ஐச் சேர்ந்த லெய்ரன் பொணிவஸ் என்பவர் பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஜெயச்சித்திரா சிறீதரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1004ம் இலக்க 15.06.2011ம் திகதியிடப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் குறித்த ஆதனம் தனக்கு உரித்தானது என வெளிப்படுத்தியுள்ளதுடன் 1982ம் ஆண்டிலிருந்து தனது ஆட்சியிலுள்ளது எனவும் வெளிப்படுத்தியுள்ளார்.

**ஆதன விபரம்:-** வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை கிராம சேவையாளர் பிரிவு J/93 யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட "விளாத்தித்தோட்டம்" நிலப்பரப்பு பூச்சியம் குளி பூச்சியம் எட்டு தசம் எட்டு எட்டு (08.88) வீடும் கிணறும் எல்லைகள்.

கிழக்கும் தெற்கும் ஒழுங்கை
வடக்கு: கண்டி வீதி
மேற்கு: ஜேக்கப்பினதும் பெண் பரமேஸ்வரியினதும் ஆதனம்.
இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது லெய்ரன் பொணிவஸ் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/முழுமையாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது லெஸ்ரன் பொணிவஸ் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**முதல்வர்,**
**மாநகரசபை.**
**யாழ்ப்பாணம்.**

(சி-5370)

JSAC

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2022
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"பெண்களுக்கெதிரான அனைத்து விதமான வன்முறைகளும் மனித உரிமை மீறலாகும்."

16 2022

(c-5323)

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

# இராசிபலன்

01.12.2022
கார்த்திகை 15, வியாழக்கிழமை
அட்டமி பிற்பகல் 12.04 மணிவரை
சதயம் முற்பகல் 11.03 மணிவரை
சுபநேரம் -07.44-09.14 மணிவரை
இராகுகாலம் - 01.14-3.14 மணிவரை
சந்திராஷ்டமம்-ஆயிலியம்

**வளவன்**

**மேஷம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், நீங்கள் எதிர்பாராத முக்கிய பிரமுகர் ஒருவர் உங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

**ரிஷபம்** கூட்டுத் தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், பகையொன்று நட்பாகலாம், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்** சந்தித்த நபர்களினால் சந்தோசம் கிடைக்கும் நாள், கனவு பலிதமுண்டு, தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கன்னி** குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும் நாள்,எதிரிகள் உதிரியாகும் நாள், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** சுபகாரியப் பேச்சுகள் நல்ல முடிவிற்கு வரலாம், வியாபார விருத்தியுண்டு, நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**தனுசு** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்** பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**கும்பம்** புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்

**மீனம்** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், தூர தேசத்திலிருந்து வரும் செய்திகள் ஆச்சரியம் தரும் வகையில் அமையும்.

**திட்டமிட்டு வாழாதவன் தன் வாழ்க்கையை அழிக்கத் திட்டமிடுகின்றான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிற்கு யாத்திரை செல்பவர்கள்

# மலேரியா தடுப்பு மருந்தைப் பெறவும்

## யாழ்.மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

**இந்தியாவுக்கு தல யாத்திரைகள் செல்ல இருப்பவர்கள் சுகாதார முற்பாதுகாப்பு ஆலோசனைகளைப் பின்பற்றி மலேரியா தொற்றிலிருந்து எம்மையும் எமது நாட்டையும் பாதுகாக்க வேண்டுமென யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை 2016 ஆம் ஆண்டு முதல் மலேரியா அற்ற நாடாக உலக சுகாதார ஸ்தாபனத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே மலேரியா நோய் அதிகம் காணப்படுகின்ற இந்தியா போன்ற நாடுகளுக்கு ஐயப்பன் தல யாத்திரைக்கோ அல்லது வேறு தல யாத்திரைகளுக்கோ செல்பவர்கள் முற்காப்பாக தடுப்பு மருந்துகளை ஒரு வாரத்திற்கு முன்பிருந்தே உரிய முறையில் உள்ளெடுப்பதன் மூலம் தமக்கு மலேரியா தொற்று ஏற்படுவதை தடுக்கலாம்.

எனவே இந்தியா போன்ற நாடுகளுக்குச் செல்ல இருப்பவர்கள் மலேரியா நோயில் இருந்து தம்மை காத்துக்கொள்வதற்காக தமது பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகரை தொடர்பு கொள்வதன் மூலம், அருகில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையிலோ அல்லது சுகாதார கிராமம், பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய மலேரியா தடை இயக்க பணிமனை யிலோ (தொ.பே.இல. 021- 222 7924) தடுப்பு மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் இவர்கள் மலேரியா பரம்பல் அதிகமாகக் காணப்படும் நாடுகளில் தங்கி இருக்கும் காலப்பகுதியில் வாரத்திற்கு ஒருமுறை மட்டும் தடுப்பு மருந்துகளைத் தொடர்ந்து உள்ளெடுப்பதோடு பயணம் நிறைவுற்று நாடு திரும்பிய பின்பும் நான்கு வாரங்கள் நிறைவுறும் வரை வாரத்திற்கு ஒருமுறை தடுப்பு மருந்துகளை தொடர்ந்து எடுக்க வேண்டும்.



அவ்வாறே ஒருவருடத்திற்குள் காய்ச்சல் ஏற்படின் உங்கள் அருகில் உள்ள மருத்துவமனைக்குச் சென்று தங்கள் பயணம் தொடர்பான விபரங்களை மருத்துவருக்கு வழங்குவதுடன் மலேரியா நோய்க்காக குருதியினை பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

மேலும், இவ்வாறான பயணங்களை மேற்கொள்ளும் யாராவது குருதிக்கொடையாளர்களாக இருந்தால் மூன்று வருடங்களுக்கு இரத்ததானம் வழங்க முடியாது என மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-33)

# வேம்பிராய் பொது மயானத்தின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்



(அராலி

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட வேம்பிராய் பொது மயானத்தில் புதிய எரிகொட்டகை மற்றும் உள்ளக வீதி என்பன அமைக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபையின் சுமார் 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், மீசாலை சுடரொளி சனசமூக நிலையத்தினூடாக குறித்த வேலைத் திட்டங்கள்முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கான கள ஆய்வுப் பணிகளை சாவகச்சேரிபிரதேச சபையின் தவிசாளர் க.வாமதேவன், சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர் அ.பாலமயூரன், முன்னாள் நகரசபை உறுப்பினர் ஞா.கிஷோர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் தனுஷன் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளோடு இணைந்து நேற்று முன்தினம் மேற்கொண்டிருந்தனர்.(4-6-30-104)

# மணல் ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட் மணல் நீதிமன்ற வளாகத்தில் வைத்து நாளை மறுதினம் 3 ஆம் திகதி காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலத்தில் மணல் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும். அத்துடன் ஏல விற் பனையில் பெற்றுக் கொள்ளும் மணலை அன்றைய தினமே உடனடியாக வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும் என நீதி மன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (4-6)

## க.பொ.த.சா/தரப் பரீட்சைப் பெறுபேறுகள்-2021

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை

எஸ்.டிலக்ஸனா-9ஏ, கே.மேரிசுஜந்தா-8ஏபி, எம்.அர்ச்சனா-8ஏசி, எம்.அபிநயா-6ஏ2பிசி, எம்.காருண்யா-6ஏ2பிஎஸ், கே.ஜனுசியா-6ஏ2பிஎஸ், ஆர்.கிஷானி-5ஏபிசி2எஸ், கே.நீர்த்திகா-4ஏ3பி2சி, யே-கலைப்பிரியா-3ஏ4பி2சி, யே.கௌசிகா-3ஏ4பி2சி, வி.ஜிகிஷா-3ஏ2பி4சி, கே.மரியற் கிறிஸ்ரலின்-3ஏ2பி4சி, எஸ். சாலின்யா-3ஏபி3சி2எஸ். (4)

## காலாவதியான பொருட்கள் விற்பனை

# 12 வர்த்தகர்களுக்கு 3 இலட்சம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பலசரக்குக் கடைகளில் காலாவதியான பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த 12 உரிமையாளர்களுக்கு யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்று 3 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்துள்ளது.

யாழ்.நகர்ப் பகுதியில் 06 பலசரக்குக் கடைகள், குருநகர் பகுதியில் 05 பலசரக்குக் கடைகள் மற்றும் வண்ணார் பண்ணை பகுதியில் ஒரு கடை ஆகிய 12 கடைகளிலும் காலாவதியான பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த நிலையில் அதன் உரிமையாளர்களுக்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகர்களால், யாழ்.மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

குறித்த வழக்கு நேற்றுப் புதன்கிழமை விசாரணைக் காக எடுத்துக்கொள்ளப்பட்ட போது, 12 வர்த்தகர்களும் தமக்கு எதிரான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதை அடுத்து 12 பேருக்கும் 3 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்த மேலதிக நீதிவான் சான்றுப் பொருட்களாக மன்றில் ஒப்படைக்கப்பட்ட காலாவதியான பொருட்களை அழிக்கு மாறும் உத்தரவிட்டார். (4-6-33)

# உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தினால் மாபெரும் நடை பவனி



(அராலி)

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் மாபெரும் நடை பவனி இடம்பெற்றது.

குறித்த நடை பவனியானது துரையப்பா விளையாட்டரங்கில் இருந்து ஆரம்பமாகி குருநகர் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்திற்கு முன்னால் நிறைவுற்றது.

இந்தப் பேரணியில் விரிவுரையாளர்கள், மாணவர்கள், உயர் தொழில்நுட்பவியல் கல்லூரி மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அதேவேளை எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 9 மணியளவில் தந்தை செல்வா கலையரங்கில் யாழ். உயர் தொழில் நுட்பவியல் கல்லூரியின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-104)

# சாவகச்சேரி நகர சபையின் பாதீடு நிறைவேற்றம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான பாதீடு நேற்று புதன்கிழமை நகர சபையில் இடம்பெற்ற விசேட அமர்வின் போது ஏகமனதாக சபையால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தலைமையில் இடம் பெற்ற வரவு-செலவுத்திட்டத்திற்கான அங்கீகாரக் கூட்டத்தில் சபையின் 18 உறுப்பினர்களில் 16 பேர் வருகை தந்திருந்த நிலையில் பாதீடு எதிர்ப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (4-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து) பூநகரி

## பதவிவெற்றிடங்கள் :- வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரல்

குறித்த எமது ப.நோ.கூ.சங்கத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு தகைமை உடையவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. பதவி :- பொது முகாமையாளர் (கு.இல- 101/08) (பதவி வெற்றிடம் - 01)**
**சம்பள அளவுத்திட்டம்:- 20,665-260X10-280X10 = 26,065.00**
**தகைமைகள்:- (சு.நி 01/2021இன் படி)**

அ) கூட்டுறவு ஊழியர் 9 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/
கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

ஆ) அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம் /அதற்குச் சமமான தகைமை. இத்தகைமையானது கணக்கியல்/வியாபாரப் புள்ளி விபரவியல் /வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்./
இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/ முகாமைத்துவம்/வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

இ) அல்லது கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்
க.பொ.த உயர் தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.

**2. பதவி :- கணக்காளர் ( கு.இல- 104/09 ) (பதவி வெற்றிடம் - 01)**
**சம்பள அளவுத்திட்டம்:- 20,200-250X10-260X10 = 25,300.00**
**தகைமைகள்:- (சு.நி 01/2021இன் படி)**

அ) கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் கணக்காளர் /உள்ளகக்கணக் காய்வாளர்/கணக்குப்பதிவாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். / கூட்டுறவு ஊழியர் 11ஆவது சம்பளத்திட்டப் பதவியில் உள்ளகக்கணக்காய்வாளர்/ கணக்குப் பதிவாளர் கணக்கு அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

ஆ) அல்லது இலங்கைத் தொழில்நுட்பக்கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்குசமனான தகைமை/ மாகாண கூட்டுறவுப்பயிற்சி நிறுவனத்தினால்/தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

இ) அல்லது கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்./அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 03ஆண்டு கால அனுபவம்./
க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் /கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் 04 ஆண்டு கால அனுபவம்

**3. பதவி :- உள்ளக கணக்காய்வாளர். (கு.இல- 105/10) (பதவி வெற்றிடம் - 01)**
**சம்பள அளவுத்திட்டம்:- 19,745-225X10-250X10 = 24,495.00**
**தகைமைகள்:- (சு.நி 01/2021இன் படி)**

அ) கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் முகாமை/மேற்பார்வை நிலைப்பதவியில்/ நிறைவேற்றாளர் நிலைப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை/மேற்பார்வை நிலைப்பதவியில்/ நிறைவேற்றாளர் நிலைப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

ஆ) அல்லது இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா /இதற்குச் சமனான தகைமை / மாகாண கூட்டுறவுப்பயிற்சி நிறுவனத்தினால் / தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

இ) அல்லது கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை தொடர்பாக ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்
க.பொ.த. உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வுத் துறையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை தொடர்பாக ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**4. பதவி :- கிளை மேற்பார்வையாளர் (கு.இல- 207/11) (பதவி வெற்றிடம் - 01)**
**சம்பள அளவுத்திட்டம்:- 19,280-190X10-210X10 = 23,280.00**
**தகைமைகள்:- (சு.நி 01/2021இன் படி)**

அ) கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் களஞ்சியப் பொறுப்பாளர் /கிளை மேற் பார்வையாளர் /கிளை முகாமையாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

ஆ) அல்லது கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக /கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்/ க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக /கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

**5. பதவி :- களஞ்சியப் பொறுப்பாளர் (கு.இல- 202/11) (பதவி வெற்றிடம் - 01)**
**சம்பள அளவுத்திட்டம்:- 19,280-190X10-210X10 = 23,280.00**
**தகைமைகள்:- (சு.நி 01/2021 இன் படி)**

அ) கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் களஞ்சியப் பொறுப்பாளர்/ கொள்வனவு உத்தியோகத்தர்/ கிளை மேற்பார்வையாளர்/ கிளை முகாமையாளர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

ஆ) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் வழங்கல்/ களஞ்சிய முகாமை/ சந்தைப்படுத்தல். முகாமை தொடர்பான டிப்ளோமா சித்தி.

இ) அல்லது கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் /அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்/க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

**6. பதவி :- செயலாளர் (கு.இல- 114/12) (பதவி வெற்றிடம் - 01)**
**சம்பள அளவுத்திட்டம்:- 18,820-170X10-185X10 = 23,280.00**
**(சு.நி 01/2021 இன் படி)**

அ) கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் முகாமை நிலைப் பதவியில் / உறுப்பினர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தர்/ செயலாளர் கடமையுடன் சம்பந்தப்பட்ட எழுதுநர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் /கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் செயலாளர் கடமையுடன் சம்பந்தப்பட்ட எழுதுநர் பதவியில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

ஆ) அல்லது கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப்பத்திர பரீட்சையில் சித்தி/க.பொ.த. உயர் தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் செயலாளர் கடமையுடன் சம்பந்தப்பட்ட பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

**7. பதவி :- களஞ்சிய முகாமையாளர் (கு.இல- 208/11) (பதவி வெற்றிடம் - 02)**
**சம்பள அளவுத்திட்டம்:- 19,280-190X10-210X10 = 23,280.00**
**(சு.நி 01/2021 இன் படி)**

அ) கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்டகிளை முகாமையாளர் துறையில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு. வட மாகாணம் கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

ஆ) அல்லது கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்/ க.பொ.த. உயர்தரப்பத்திரப்பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவன மொன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

**8. பதவி :- விற்பனை உதவியாளர் (கு.இல- 308/17) (பதவி வெற்றிடம் - 02)**
**சம்பள அளவுத்திட்டம்:- 16,515 - 130 X 10 -145 X 10 = 19,265.00**
**(சு.நி 01/2021 இன் படி)**

அ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம் /08 ஆந் தர கல்விச் சான்றிதழ்

**9. பதவி :- சாரதி (கு.இல- 312/13) (பதவி வெற்றிடம் - 01)**
**சம்பள அளவுத்திட்டம்:- 18,360 - 160 X10- 170 X 10 = 21,660.00**
**(சு.நி 01/2021 இன் படி)**

அ) 05 ஆம் தரக் கல்விச் சான்றிதழுடன் பேருந்து / லொறி/பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**10. பதவி :- சாரதி (கு.இல- 312/14) (பதவி வெற்றிடம் - 01)**
**சம்பள அளவுத்திட்டம்:- 17,900- 155 X 10-165 X 10 = 21,100.00**
**(சு.நி 01/2021 இன் படி)**

அ) 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் பேருந்து /லொறி/பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப் பத்திரத்துடன் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

**11. பதவி :- எரிபொருள் நிரப்புநர் (கு.இல- 313/16) (பதவி வெற்றிடம் - 04)**
**சம்பள அளவுத்திட்டம்:- 16,975 -135X10-150X10 = 19,825.00**
**(சு.நி 01/2021 இன் படி)**

அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

ஆ) அல்லது கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்/08 ஆம் தர கல்விச் சான்றிதழ்.

**12. பதவி :- இயந்திர இயக்குநர் (கு.இல- 318/12) (பதவி வெற்றிடம் - 02)**
**சம்பள அளவுத்திட்டம்:- 18,820-170X10-185X10 = 23,280.00**
**(சு.நி 01/2021 இன் படி)**

அ) கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத் திட்டப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

ஆ) அல்லது கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்/08 ஆம் தர கல்விச் சான்றிதழ்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 14.12.2022 வரையாகும்**
**வயது எல்லை:- 18 - 45**

**ஏனைய விபரங்கள்:-**

- இப்பதவிகளுக்கு அடிப்படை சம்பளத் திட்டங்களுக்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களுக்கு அமைய இதர படிகளும் காலத்திற்குக்காலம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- கூட்டுறவுச் சங்க பணியாளராயின் அந்தந் கூட்டுறவுச் சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பிக்க வேண்டும்
- குறித்த பதவிகளுக்கு தெரிவாகும் விண்ணப்பதாரிகள் சங்கத்தினால் கோரப்படும் பிணையினை செலுத்த வேண்டும்.
- சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி கல்வித்தகைமை சான்றிதழ், வேலைத்தகைமை சான்றிதழ், ஏனைய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினை இணைத்து தலைவர், பூநகரி பல நோ.கூ.சங்கம், பூநகரி என்னும் முகவரிக்கு தபால் மூலமோ அல்லது நேரிலோ **14.12.2022** ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டும்.

**தா.அரியரத்தினம்,**
**தலைவர்,**
**பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**பூநகரி.**

(C-5369)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு தொடர்ந்தும் உதவுவதாக உலக வங்கி உறுதியளிப்பு



(கொழும்பு)

பொருளாதார நிலைமையை முன்னேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள இலங்கையின் குறுகிய கால நடவடிக்கைகள் குறித்து திருப்தி தெரிவித்த உலக வங்கியின் பணிப்பாளர், இடைக் கால மற்றும் நீண்ட கால முயற்சிகளின் அவசியத்தை வலியுறுத்தியதுடன், இலங்கைக்கு தொடர்ந்து உதவுவதாகவும் உறுதியளித்தார்.

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் முன் மொழியப்பட்டுள்ள எதிர்கால திட்டங்கள் குறித்து பிரதமர் தினேஷ் குணவர்தன உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் சியோகந்தா மற்றும் சிரேஷ்ட மூலோபாய மற்றும் செயற்பாட்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க அமைச்சரவை மற்றும் பாராளுமன்றம் மூலம் விரைவில் நிறைவேற்றப்படும் நிதி சீர்திருத்தங்கள் உள்ளிட்ட புதிய சீர்திருத்தங்கள் குறித்து அவர்கள் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர். (நி)

# ஆளணிப் பற்றாக்குறையால் ரயில் சேவையை முன்னெடுப்பதில் சிக்கல்

(கொழும்பு)

தற்போது நிலவும் ஆளணிப் பற்றாக்குறை காரணமாக ரயில் சேவையை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல் நிலை காணப்படுவதாக ரயில்வே திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

திணைக்களத்தில் காணப்படும் 8,000 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக பொதுச் சேவை ஆணைக்குழுவின் அனுமதி கோரப்பட்ட போதிலும், அதற்கான அனுமதி இதுவரை கிடைக்கப்பெறவில்லை என ரயில்வே திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

அதன் காரணமாக ஓய்வு பெற்றவர்களை மீண்டும் பணிக்கு அழைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (நி)


அரசாங்க அறிவித்தல்
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான கால நீடிப்பு

2022.10.19 ஆம் திகதிய வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்கான நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான இறுதித் திகதி 2022.12.16 ஆம் திகதி விரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**மாவட்ட செயலாளருக்காக,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.** (C-5379)


# மணல் அகழ்வைத்தடுத்த இளைஞரின் மீது தாக்குதல்

(கரணவாய்)

சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுத்து, மணல் கடத்த முயன்ற ஒருவரை பிடித்து விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைத்த இளைஞர் ஒருவர் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இரவு வலிக்கண்டிப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் வாகனம் ஒன்று மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்தது. இதனை அப்பகுதி இளைஞர்கள் சேர்ந்து தடுக்க முற்பட்டபோது வாகனம் தப்பிச் சென்ற நிலையில் அவர்களுடன் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் மக்களால் பிடிக்கப்பட்டு விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் விசேட அதிரடி படையினரிடம் இரவு ஒப்படைக்கப்பட்ட நபர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை வலிக்கண்டிப் பகுதிக்கு வேறு ஆட்களையும் அழைத்துச் சென்று இளைஞர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளதுடன், அச்சுறுத்தலும் விடுத்துள்ளார். காயமடைந்த இளைஞர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (4-6-60)



இந்திய அரசாங்கத்தினால் விவசாயிகளுக்கென கமநல சேவை நிலையங்களுக்கு 2010 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட உழவியந்திரங்கள் அனைத்தும் பழுதடைந்த நிலையில் குறித்த உழவியந்திரங்களை நேற்றைய தினம் யாழ். இந்தியத் துணைத்தூதரக தலைமை நிர்வாக அதிகாரி உள்ளிட்ட குழுவினர் கிளிநொச்சியில் உள்ள அனைத்து கமநல சேவை நிலையங்களுக்கும் சென்று பார்வையிட்டு விவசாயிகளுடனும் கலந்துரையாடினர். (படம்:-தேவானந்தன்)


# வேலணை பிரதேச சபை பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

வேலணை பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு உரிமை கோரப்படாத கட்டாக்காலி (பசு மாடு ஒன்றும் மறி ஆடு ஒன்றும்) கால்நடைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இடம்:- வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகம்
காலம்:-02.12.2022 வெள்ளிக்கிழமை மு.ப 11.30 மணி

- ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் குறித்த இடத்தில் உரிய கட்டணத்தை செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.
- பகிரங்க ஏலத்தில் சித்தியடைவோர் உடனடியாக பணத்தினை செலுத்தி உரிய பட்டியிலிருந்து உரிய அனுமதியுடன் அன்றைய தினமே ஏற்றிச் செல்லல் வேண்டும்.

**நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி,**
**தவிசாளர், பிரதேச சபை,**
**வேலணை.**

தொடர்புகளுக்கு:- **021 221 1505**

01.12.2022 (C-5378)


# கேள்வி அறிவித்தல்
# சபை நிதி வேலைத்திட்டம்-2022
# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

1. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் சபை நிதி குறித்த வேலைத்திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. **தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் **(Black List)** சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் **road அமைப்புக்கான** சிடா (CIDA) பதிவினை மேற்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள், **கேள்வி ஆவணம் பகுதி 4 இல்** குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule 5) கேள்வி ஆவணம் பகுதி 5** இல் காட்டப்பட்டுள்ளது.
5. குறித்த பெறுகை 03/2020 .03/2020 (i) இலக்கங்களை உடைய 09.10.2020. 11.01.2021 ஆம் திகதிகளின் பொதுநிதி சுற்று நிருபங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037 , தொலைநகல் 021-205-0036 .E-Mail:** pallaips@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை **09.00** மணி முதல் **14.00** மணி வரை **01.12.2022** ஆம் திகதியிலிருந்து **14.12.2022** ஆம்திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** எனும் இடத்திலிருந்து **01.12.2022** ஆம் திகதியிலிருந்து **14.12.2022** ஆம் திகதிவரை அலுவலக நாட்களில் மட்டும் காலை **09.00** மணிக்கும் **14.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2,000/-** (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** எனும் முகவரிக்கு **14.12.2022** திகதி மாலை **14.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விகள் செல்லுபடியாகு மகாலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை: பிணைவைப்பு (Rs) | வேண்டப்படும் கேள்விப் பிணை: செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| NP/14/45(3)/PL/03/cf/tend/04/2022 | Reconstruction of Mullippattu sub office roads 02 | 2.60 Mn | 60 நாட்கள் | C8 and above (Road) | 63 days from bid open (15.02.2023) | 27,000.00 | 15.03.2023 |
| NP/14/45(3)/PL/03/cf/tend/01/2022 | Reconstruction of Mukamalai sub office roads | 1.73 Mn | 60 நாட்கள் | C9 and above (Road) | 49 days from bid open (01.02.2023) | 18,000.00 | 01.03.2023 |
| NP/14/45(3)/PL/03/cf/tend/03/2022 | Reconstruction of Mullippattu sub office roads 01 | 1.73 Mn | 60 நாட்கள் | C9 and above (Road) | 49 days from bid open (01.02.2023) | 18,000.00 | 01.03.2023 |
| NP/14/45(3)/PL/03/cf/tend/02/2022 | Reconstruction of Puloppalai sub office roads | 3.47 Mn | 60 நாட்கள் | C8 and above (Road) | 63 days from bid open (15.02.2023) | 35,000.00 | 15.03.2023 |
| NP/14/45(3)/PL/03/cf /2022/ith.Turf | Improvement work for Iththavil children park at Pallai | 0.43 Mn | 30 நாட்கள் | C9 and above (building) | 49 days from bid open (01.02.2023) | 4,500.00 | 01.03.2023 |

11. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் **08.12.2022** திகதி காலை **10.30** மணிக்கு **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்பட மாட்டாது.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**சுப்பிரமணியம் சுரேன்,**
**தவிசாளர்,**
**[illegible] பெறுகைக்குழு,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.**

01.12.2022 (C-5376)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## 2023 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் படவரைஞர்களையும் பதிவு செய்தல்

சாவகச்சேரி நகராட்சிமன்றமானது 2023 ஆம் ஆண்டிற்கான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருட்கள். சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள். உற்பத்தியாளர்கள். ஒப்பந்தக்காரர்கள். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள். வியாபார நிறுவனங்கள். படவரைஞர்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்களைக்கோருகின்றது. விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நாட்களில் மு.ப 8:30 தொடக்கம் பி.ப 3.00 வரை வழங்குநர்கள் பதிவுக்கட்டணமாக ரூ.1000.00 ம் படவரைஞர்கள் பதிவுக்கட்டணமாக ரூ.3500ம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பப் படிவ்ங்கள் 31.12.2022 ஆம் திகதி வரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தொகுதிகள்**

தொகுதி "A" - பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" - சேவைகள் /வேலை
தொகுதி "C" - வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும்

**பொருட்கள்**

| தொகுதி இல | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A-01 | காகிதாதிகள் எழுது பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/ இரும்பு/ உருக்கு/ ஏனையவை) |
| A-03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள் றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A-04 | ஜன்னல், திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணி வகைகள் |
| A-05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் கல் வகைகள் நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடு இணைந்த பொருட்க்ள் |
| A-06 | கட்டட இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயார் பொருட்கள் |
| A-07 | மின்சாரப் பொருட்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்பிற்கான பொருட்கள், மின் மோட்டர்கள், மின்சார பல்புகள், மின்விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A-09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம், ஹாபிக் மற்றும் கிருமிநாசினிகள் ஏனையவை |
| A-10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், ரயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| A-11 | தோலுற்பத்திப் பொருட்கள், கம் பூட்ஸ், சப்பாத்துக்கள் |
| A-12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A-13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A-14 | இரும்புப் பொருட்கள் |
| A-15 | கற்கள்,. மணல் வகைகள் |
| A-16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A-17 | பனை மரங்கள், சலாகைகள் |
| A-18 | பாதணிகள், தோற்பொருட்கள் |
| A-19 | அலங்காரப் பொருட்கள் |
| A-20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப் பொருட்கள் |

| தொகுதி இல | வேலைகள் விவரம் |
|---|---|
| B-01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் தொழில்நுட்ப ஆலோசனையும் வழங்குதல் |
| B-02 | உருக்கு, மரத்தள பாடங்கள் திருத்தம் |
| B-03 | மின் உபகரணங்கள் திருத்தம், சேவிஸ் செய்தல் ( காற்றுக் குளிராக்கி, நிழற்படப்பிரதி இயந்திரம், கணனிவிரல் அடையாளத்தைப் பதிவு செய்யும் இயந்திரம்.) |
| B-04 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும். |
| B-05 | பதிப்பக வேலை சகலவித படிவங்கள், ஏனையவை. |
| B-06 | கட்டட அமைப்பும் திருத்த வேலையும் |
| B-07 | உள்ளக தொலைபேசி இணைப்பும் பராமரித்தலும் |
| B-08 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B-09 | கோலவுடை தைத்தல், திரைச்சீலை |
| B-10 | இறப்பர் முத்திரை வகைகள் தயாரித்து வழங்குதல் |

| தொகுதி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| C-01 | சகலவிதமான வாகன திருத்தமும், மின்சார வேலை, வாகன உட்பக்கம், சீற் என்பவற்றுக்கான குசன் வேலை. |
| C-02 | சகலவிதமான வாகன சுத்திகரிப்பு. |
| C-03 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள். |

**நிபந்தனைகள்**

1. வழங்கல்கள்/ சேவைகள் 2023 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியாகும்.
2. திருப்திகரமற்ற வழங்கல்கள்/சேவைகள் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
3. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**இ.சிவமங்கை, தவிசாளர்,**
**நகராட்சிமன்றம், சாவகச்சேரி.**

(C-5374)

# சட்டவிரோத குடியேற்றவாசிகளை அவுஸ்.அரசாங்கம் ஒருபோதும் ஏற்காது

## அவுஸ்திரேலிய துப்பறியும் கண்காணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக குடியேறியவர்களை அவுஸ்திரேலிய அரசாங்கம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது.

எனவே சட்டவிரோத ஆள் கடத்தல்காரரிடம் உங்கள் பணத்தையும் உயிரையும் பணயம் வைத்து பயணிக்க வேண்டாம் என இலங்கை அவுஸ்திரேலியா துப்பறியும் கண்காணிப்பாளர் மூத்த அதிகாரி ஃபெடரல் பொலிஸார் றோபர் வில்சன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸ் காரியாலத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவுக்கு இலங்கையில் இருந்து சட்டவிரோத குடியேற்ற வாசிகள் தொடர்ச் சியாக அவுஸ்திரேலியாவுக்கு ஆள்கடத்தல்காரர் ஊடாக குடியேற முயற்சித்தனர். இவர்களை அவுஸ்திரேலிய பொலிஸார் மற்றும் கடற்படையினர் கைது செய்து திருப்பி [illegible]

எனவே எப்போதும் [illegible] திரேலியா சட்டவிரோத குடியேற்ற வாசிகளை ஏற்றுக்கொள்ளாது. எனவே உங்களுடைய பணத்தையும் உயிரையும் சட்டவிரோத ஆள்கடத்தல்காரர்களிடம் கொடுத்து ஏமாறவேண்டாம். ஆகவே இதனை பொதுமக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இலங்கை பொலிஸாருடன் அவுஸ்திரேலிய பொலிஸார் இணைந்து இந்த ஆள்கடத்தல் கும்பல் தொடர்பாக தகவல் பரிமா றவுள்ளதுடன் ஆள்கடத்தல்காரர்களை கைது செய்து சட்டத் துக்குமுன் நிறுத்த [illegible] எனத் தெரிவித்தார். (நி)

# மாணவர்களை இலக்கு வைத்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த போதை கலந்த இனிப்புகள் மீட்பு



(பாணந்துறை)

போதைப்பொருள் அடங்கிய 40.000 இனிப்பு வகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் இவை சிறுவர்களுக்கு விற்கத் தயாராக வைத்திருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் பாணந்துறை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள் ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். பாணந்துறையில் உள்ள தனியார் பாடசாலை ஒன்றிற்கு முன்பாக உள்ள கடையொன்றில் இவை விற்பனை செய்யப்படுவதாகவும் புறநகர்ப் பாடசாலை மாணவர்களின் பெற்றோரிடமிருந்து கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் பாணந்துறை வடக்கு பொலிஸார் குறித்த கடையை சுற்றி வளைத்துள்ளனர்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோத னையில் குறித்த கடையில் 40 ஆயிரம் போதை கலந்த இனிப்புகள் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளன. (நி)

# காலநிலை மாற்றம் நவீன உலகிற்கு பாரிய அச்சுறுத்தல்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

காலநிலை மாற்றத்திற்கு பயனுள்ள தீர்வுகளை வழங்கக்கூடிய நாடுகள், நேரடியாக தலையிடாவிட்டால் மனித குலத்தின் எதிர்கால இருப்பை அச்சுறுத்தும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கோப் 27 உடன்படிக்கை தொடர்பில் ஜனாதிபதி வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டதாவது,

"எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மனிதன் - கால நிலை மாற்றம் எனும் மிகப் பெரிய அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்காக உலகத் தலைவர்கள் கடந்த 27 ஆண்டுகளாக கோப் கட்டமைப்பின் கீழ் கூடி வருகின்றனர்.

வரலாற்று ரீதியாக பொறுப்புக்கூற வேண்டிய நாடுகள் மற்றும் அர்த்தமுள்ள பங்களிப்புகளை வழங்கக்கூடிய நாட்டுத் தலைமைகள் சமுகமளிக்காமையானது காலநிலை நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைத் தடுக்கிறது.

உலகம் முன்பு கணித்ததை விட வேகமாக முன்னேறி வருகிறது. எனவே, காலநிலை மாற்றத்தைத் தணிக்கும் முயற்சிகள் மேலும் தேக்க நிலையில் இருக்க முடியாது.

உலக வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸ்°க்கு மேல் உயரக் கூடாது என்று கடந்த ஆண்டு உலகமே ஒருமனதாக தீர்மானித்தது. இதற்கான செயற்றிட்டமும் முன்வைக்கப்பட்டது.

அதற்கான அசல் இலக்கு நடைமுறைப்படுத்தப்படாத போதும் அதனை செயற்படுத்த வேண்டிய விதம் குறித்து கோப் 27 இல் சமரசம் செய்யப்பட்டது.

மேலும், புதைபடிவ எரிபொருட்களை படிப்படியாக வெளியேற்றுவதிலோ அல்லது உமிழ்வுகள் மீதான புதிய இலக்குகளிலோ உறுதியான உறுதிப்பாடு எதுவும் இல்லை.

இந்த ஒப்பந்தங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயத்திற்கு ஒரு எளிய கட்டு. காலநிலை மாற்றம் என்பது பயங்கரவாதத்தைப் போலவே நவீன உலகிற்கு மிகவும் அச்சுறுத்தலானது.

உலகத் தலைவர்கள் அக்கறையுடன் இவ்விடயத்தில் ஈடுபடவில்லை என்றால், உலகளாவிய காலநிலை மோசமடைந்து, குடியிருப்புகள் பாதிக்கப்படும்போது அவர்கள் வெறுமனே ஓரத்தில் இருந்து பேச்சு நடத்தியவர்களாக மட்டுமே இருப்பர் என அவர் அறிக்கையில் குறிப்பிட்டார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எள்சார் உற்பத்தி நிலையம் கிளிநொச்சியில் திறந்து வைப்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட விநாயகபுரம் கிராமத்தில் IOM நிறுவனத்தின் நிதி அனுசரணையில் அமைக்கப்பட்ட எள்சார் உற்பத்தி நிலையம் கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் அமல்ராஜ், உதவி பணிப்பாளர் சசீபன், IOM நிறுவனத்தின் கொழும்பு அலுவலக பிரதிநிதி கயானி, IOM நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் ஜெமீன் மற்றும் கிராம மட்ட அமைப்புகளின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (4-6-100)



வேலணை மத்தியஸ்தர் சபையின் உறுப்பினரான இ.சிவநாதன் இலங்கை நீதி அமைச்சரால் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிவான் ஜெ.கஜநீதிபாலன் முன்னிலையில் உறுதிப் பிரமாணம் செய்து கொண்டார்.

# உலக எய்ட்ஸ் தினம் இன்று

(கொழும்பு)

ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் 1 ஆம் திகதி உலக எய்ட்ஸ் தினம் அனுசரிக்கப்படுகிறது. எச்.ஐ.வி நோயுடன் வாழும் மக்களுக்கும் எய் ட்ஸ் காரணமாக உயிர் இழந்தவர்களுக்கும் ஆதரவைக் காட்டுவதற்காக இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது. உலக எய்ட்ஸ் தினம் முதன் முதலில் 1987 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் தாமஸ் நெட்டர் மற்றும் ஜேம்ஸ் பான் ஆகியோரால் கொண்டு வரப்பட்டது.(4-6)

# கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் மாவட்ட மட்ட நாட்டியப் போட்டிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தினால் 30 ஆம் ஆண்டு நிறைவையொட்டி மாவட்ட மட்ட நாட்டியப் போட்டிகள் கடந்த 26 ஆம் திகதி முன்னாள் அரசாங்க அதிபர் க.பொன்னம்பலம் அவைக்கூடத்தில் தமிழ்ச் சங்கத் தலைவர் வே.தபேந்திரன் தலைமையில் நடைபெற்றது.



நிகழ்வின் முதன்மை விருந்தினராக அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டார். கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய 4 கோட்டப் பாடசாலைகளின் மாணவர்கள் பங்கேற்ற ஆரம்பப் பிரிவுப் போட்டிகள் நடைபெற்று ஒரு தொகுதி வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கான இறுதித் தெரிவுப் போட்டி மிக விரைவில் நடத்தப்பட்டு வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். திறந்த பிரிவுக்கான போட்டிகளும் நடத்தப்பட்டு வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (4-6)


## பெறுகை அறிவித்தல்
## சபைநிதி 2022, நகராட்சி மன்றம்-சாவகச்சேரி

**Multi Function போட்டோ பிரதி இயந்திரம் கொள்வனவு செய்தல், கேள்வி இல :-**
**NP/14/41(3)/3/PO/Photocopier/2022**

**கணனிதொகுதி (UPS,CPU,Moniter,KeyBoard,Mouse) கொள்வனவுசெய்தல்,கேள்வி இல:-**
**Np/14/41(3)/3Po/Computer/2022**

1. தலைவர். பெறுகைக்குழு.நகராட்சிமன்றம்.சாவகச்சேரி அவர்களினால் தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பொருட்களுக்காக கோரப்படுகின்றது.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு.வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும்.அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர். பெறுகைக்குழு. நகராட்சிமன்றம்.சாவகச்சேரி தொலைபேசி- **021 227 0498,** தொலைநகல் - **021 227 0079** மின்னஞ்சல்: chavauc@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் **01.12.2022** ஆம் திகதியிலிருந்து **15.12.2022** ஆம் திகதிவரை அலுவலக நாட்களில் **மு.ப 9.00**மணிமுதல் **14.00** மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர். பெறுகைக்குழு.நகராட்சிமன்றம்.சாவகச்சேரி இடமிருந்து **01.12.2022** ஆம் திகதியிலிருந்து **15.12.2022** ஆம் திகதி வரை **மு.ப 9.00** மணிக்கும் **14.00** மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா.1,000/-** (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் .பெறுகைக்குழு. நகராட்சிமன்றம். சாவகச்சேரி எனும் முகவரிக்கு **15.12.2022** ஆம் திகதி பிற்பகல் **14.30** மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
7. கீழ்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது 02.02.2023) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
8. கேள்விகள் தொடர்பான இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவினால் எடுக்கப்படும்.
9. கேள்விப்பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| | கேள்விஎண் | வேலைவிபரம் | மதிப்பீட்டுதொகைமில்லியனில் (Vat, நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைவைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(3)/3/PO/ Photocopier/2022 | Multi Functionபோட்டோ பிரதி இயந்திரம் கொள்வனவு | 0.9Mn | 02Months | அங்கீகரிக் கப்பட்ட நிறுவனம் | 9000.00 | 02.03.2023 |
| 02 | Np/14/41(3)/3PO /Computer/2022 | கணனிதொகுதி (UPS,CPU,Moniter, KeyBoard,Mouse) கொள்வனவு | 1.8Mn | 02Months | அங்கீகரிக் கப்பட்ட நிறுவனம | 18000.00 | 02.03.2023 |

10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 08.12.2022 ஆம் திகதி பி.ப. 14.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**நகராட்சிமன்றம், சாவகச்சேரி.**

(C-5375) **01.12.2022**


# கிளிநொச்சி உறவுகள் கவனயீர்ப்பு போராட்டம்



(முறிகண்டி)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளால் நேற்று கிளிநொச்சியில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்க அலுவலகம் முன்பாக இடம்பெற்றது. இதன் போது, சர்வதேசத்திடம் நீதி கோரி மக்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். (4-6-100-316)

# நல்லூர் பிரதேச சபையின் பாதீடு நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நல்லூர் பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 13 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் ஆளுகைக்குட்பட்ட நல்லூர் பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நேற்று புதன்கிழமை தவிசாளர் ப.மயூரனால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது இலங்கை தமிழரசுக் கட்சியின் 3 உறுப்பினர்கள், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் 3 உறுப்பினர்கள், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் 4 உறுப்பினர்கள், சுயேச்சை குழுவின் 2 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலா ஒரு உறுப்பினர் என 15 உறுப்பினர்கள் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். அதே வேளை, அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் 2 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர். (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
## வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் கோரல்-2023

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆலய முகாமைத்திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். புதிதாக விண்ணப்பிப்பவர்களாயின் **"முதலாவது அட்டவணை"** என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும். ஏற்கனவே 2022 ஆம் ஆண்டில் வழிபடுநர் பேரவையின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் தமது உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்வதற்கு **"இரண்டாவது அட்டவணை"** என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை கோவில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். நேரில் வந்து பெற முடியாதவர்கள் கீழே காட்டப்பட்ட மாதிரிக்கு அமைய படிவத்தை சுயமாகவே தயாரித்தும் விண்ணப்பிக்க முடியும். **விண்ணப்ப முடிவுக் காலம் 01.12.2022 தொடக்கம் 31.12.2022 பிற்பகல் 5.00 மணி வரையாகும்.** கோவிலில் உபயகாரராக இருக்கும் ஒருவர் பத்து ரூபாவுக்கான (ரூபா 10/=) காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையையும் உபயமில்லாதவர்கள் ஐம்பது ரூபாவுக்கான (ரூபா 50/=) காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் பெற்று விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்க வேண்டும்.

கட்டளைகள் யாவும் **"பொருளாளர், அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** எனும் பெயருக்கு எழுதப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேற்பாகத்தில் **"வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் 2023"** எனக் குறிப்பிட்டு **"செயலாளர் அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். நேரில் கையளிக்க விரும்புவோர் ஆலய அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியினுள் இட வேண்டும். விண்ணப்பங்கள் சமாதான நீதிவான், இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர், அரசாங்க பாடசாலை அதிபர், இந்து மத குரு, கிராம சேவை உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் உள்ளடங்கலாக அவரின் பதவிக்கான முத்திரை (றபர் ஸ்டாம்ப்) இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலதிக விபரங்கள் தேவைப்படின் 021-4323 440/ 021-4323 447 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும்.

**செயலாளர் ந.மோகனரூபன், அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.**

**முதலாவது அட்டவணை - (படிவம் 01)**

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் 2023 ஆம் ஆண்டு

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :- ..............................
2. பிறந்த நாள் :- ..............................
3. இந்துசமயத்தவரா? :- ..............................
4. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் வழிபடுபவரா? :- ..................
5. நீங்கள் உறுப்புரிமை 3(2)(ஏ) அல்லது 3(2)(பீ) யின் கீழ் உறுப்புரிமைக்கு தகுதி பெறுபவராயின், இந்த ஆண்டு கோவிலுக்கு செலுத்திய கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்களைத் தருக.

| பற்றுச்சீட்டு வழங்கிய நாள் | பற்றுச்சீட்டின் தொடர் எண் | செலுத்திய தொகை | எந்தத் திருவிழா அல்லது பூசை தொடர்பில் இக்கொடுப்பனவு செய்யப்பட்டது என்ற விபரம் |
|---|---|---|---|
| | | | |

6. இலங்கை முகவரி :- ...................... , தேசிய அடையாள அட்டை இல:-..............................
7. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை / தபாற் கட்டளையின் விபரம் :-

**காசுக் கட்டளை / த.க. இல** .............................. **அலுவலகமும் வழங்கிய நாளும்** .............................. **தொகை** ..............................

8. நீங்கள் ஏதாயினும் குற்றத்திற்காக நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாக காணப்பட்டீர்களா? அப்படியாயின் வழக்கு இலக்கத்துடன் முழு விபரங்களையும் தருக.
9. இந்தக் கோவிலில் வேதனம் அல்லது வேறு கொடுப்பனவை பெறும் ஒரு ஊழியராகவோ அல்லது குருவாகவோ நீங்கள் உள்ளீர்களா?
10. இக்கோவிலுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளீர்களா? அப்படியாயின் முழு விபரங்களையும் தருக.

மேற்கூறிய விபரங்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில், உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துவதோடு, வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராக பதிவு செய்து கொள்வதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

..............................
**விண்ணப்பதாரர் ஒப்பந்தம்**

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தை புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில் ............. ஆம் ஆண்டு ..................... மாதம் ..................... நாளன்று ................ என்னும் இடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதி செய்கின்றேன்.

**என் முன்னிலையில்**

..............................
**உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்**

**குறிப்பு** :- விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர், பதவிக்கான முத்திரை "(றபர் ஸ்ராம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
**2022.12.31** ஆம் திகதி மாலை **5.00** மணிக்கு முன்பாகக் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**இரண்டாம் அட்டவணை - (படிவம் 02)**

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
## வழிபடுநர் பேரவையின் உறுப்புரிமையைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்
## 2023 ஆம் ஆண்டு

செயலாளர், அறங்காவலர் சபை ஸ்ரீ நகாபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.

**வழிபடுநர் பேரவைக்கான சந்தா புதுப்பித்தல்**

............ ஆம் ஆண்டு ஜனவரி முதனாம் நாள் தொடக்கம் ஓராண்டுக்கு வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான எனது சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ள இத்தால் விண்ணப்பிக்கின்றேன்......... அஞ்சலகத்தால் ............ ரூபா பெறுமதிக்கு வழங்கப்பட்ட ............ இலக்கங்கொண்ட காசுக்கட்டளை / தபாற் கட்டளையொன்றை இத்துடன் இணைத்துள்ளேன். வழிபடுநர் பேரவையின் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் நான் தொடர்ந்தும் கொண்டிருக்கின்றேன் என்று இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

முழுப்பெயர் :- .......................... முகவரி :- ..........................
எனக்குள்ள உபயம் :- .......................... உபயக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் :- ......................

..............................
**உறுப்பினர் ஒப்பம்**

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம், எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு என் முன்னிலையில் ................. ஆம் ஆண்டு ................. மாதம் ................. நாளன்று ................. என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதி செய்கின்றேன்.

**என் முன்னிலையில்**

..............................
**உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்**

**குறிப்பு** :- விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர், பதவிக்கான முத்திரை "(றபர் ஸ்ராம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
**2022.12.31** ஆம் திகதி மாலை **5.00** மணிக்கு முன்பாகக் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(அ-5372)

# இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தல் சிக்கிய தமிழக அரசியல்வாதிகள்



(சென்னை)

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த சுமார் 1,620 கோடி ரூபாய் பெறுமதியான கொக்கேய்ன் போதைப்பொருளுடன் தமிழக அரசியல்வாதிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த சனிக்கிழமை இராமேஸ்வரம் அருகே பொலிஸார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது அதிவேகமாக வந்த சொகுசு கார் ஒன்றை தடுத்து நிறுத்தி பொலிஸார் சோதனையிட்டுள்ளனர்.

அதன்போது, குறித்த காரில் இருந்து 30 கொள்கலன்களில் அடைக்கப்பட்டிருந்த கொக்கேய்ன் போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

தொடர்ந்து நடத்திய விசாரணையில், இராமேஸ்வரத்திலிருந்து படகு மூலம் இந்த போதைப்பொருள் இலங்கைக்கு கொண்டு செல்ல திட்டமிடப்பட்டிருந்தமை தெரிய வந்துள்ளது.

போதைப்பொருளை பறிமுதல் செய்த பொலிஸார், காரில் இருந்த சகோதரர்களான தமிழகத்தை சேர்ந்த இரு அரசியல் வாதிகளை கைது செய்தனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி)

# ஓமான், ஐக்கிய அரபு இராச்சியத்தில் தங்கியுள்ள 77 பேரை இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை

(கொழும்பு)

ஓமான் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளில் சுற்றுலா விசாவில் தங்கியுள்ள 77 இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளர், பிரதி பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய குழுக்கள் அந்தந்த நாடுகளுக்கு பயணிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மனிதக் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்ட ஓமானுக்கான இலங்கை தூதரகத்தின் முன்னாள் மூன்றாம் செயலாளர் ஈ.குஷான் என்பவரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 41





தோணித்துறையில் ஓடம் ஒன்று நின்றது. ஓடந்தள்ளுவோர் இருவர் கையில் நீண்ட கோல்களுடன் ஆயத்தமாயிருந்தார்கள். படகில் ஒரு மனிதர் ஏற்கனவே ஏறியிருந்தார். அவரைப் பார்த்தால் பெரிய சிவபக்த சிகாமணி என்று தோன்றியது. கரையில் வந்து கொண்டிருந்தவர்களைப் பார்த்து, "சாமி படகில் வரப் போகிறீர்களா?" என்று பட கோட்டிகளில் ஒருவன் கேட்டான்.

"ஆம்; இவர் வரப்போகிறார் கொஞ்சம் படகை நிறுத்து!" என்றான் கந்தமாறன்! இரு நண்பர்களும் குதிரை மீதிருந்து கீழே குதித்தார்கள். "யோசனை இல்லாமல் வந்து விட்டேனே? இந்தக் குதிரையை என்ன செய்வது? படகில் ஏற்ற முடியுமா?" என்று வந்தியத்தேவன் கேட்டான். "தேவையில்லை, நம்மைத் தொடர்ந்து இதோ இரண்டு ஆட்கள் வந்திருக்கிறார்கள். ஒருவன் உன் குதிரையை இங்கிருந்து கடம்பூருக்கு இட்டு வருவான். இன்னொருவன் உன்னுடன் படகில் ஏறி வந்து அக்கரையில் உனக்கு வேறு குதிரை சம்பாதித்துக் கொடுப்பான்!" என்றான் கந்தமாறன்.

"ஆஹா! எவ்வளவு முன்யோசனை? நீ அல்லவா உண்மை நண்பன்!" என்றான் வந்தியத்தேவன். "பாலாற்றையும் பெண்ணையாற்றையும் போலத்தான் கொள்ளிடத்தைப் பற்றி நீ நினைத்திருப்பாய். இதில் குதிரையைக் கொண்டு போக முடியாது என்று நீ எண்ணியிருக்கமாட்டாய்!"

"ஆமாம்; அவ்விதம் உங்கள் சோழ நாட்டு நதியைப் பற்றி அலட்சியமாய் நினைத்ததற்காக மன்னித்துவிடு! அப்பப்பா இது என்ன ஆறு? இது என்ன வெள்ளம்? சமுத்திரம் போல அல்லவா பொங்கி வருகிறது?" இரு நண்பர்களும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு விடை பெற்றுக் கொண்டார்கள்.

வந்தியத்தேவன் நதிக்கரையோரமாகச் சென்று படகில் ஏறினான். கந்தமாறனுடன் வந்த ஆட்களில் ஒருவனும் ஏறிக் கொண்டான். படகு புறப்படுவதற்குச் சித்தமாயிருந்தது. ஓடக்காரர்கள் கோல்போட ஆரம்பித்தார்கள்.

திடீரென்று கொஞ்ச தூரத்திலிருந்து, "நிறுத்து! நிறுத்து! படகை நிறுத்து!" என்று ஒரு குரல் கேட்டது. ஓடக்காரர்கள் கோல் போடாமல் கொஞ்சம் தயங்கி நின்றார்கள். கூவிக் கொண்டு ஓடி வந்தவன் அதிவிரைவில் கரைக்கருகில் வந்து சேர்ந்தான். முதற் பார்வையிலேயே அவன் யார் என்பது வந்தியத்தேவனுக்குத் தெரிந்து போயிற்று; அவன் ஆழ்வார்க்கடியான் நம்பிதான்.

வருகிறவர் வைஷ்ணவர் என்பதை அறிந்ததும் படகிலிருந்த சைவர், "விடு! படகை விடு! அந்தப் பாஷாண்டியுடன் நான் படகில் வரமாட்டேன்; அவன் அடுத்த படகில் வரட்டும்!" என்றார். ஆனால் வந்தியத்தேவன் ஓடக்காரர்களைப் பார்த்து, "கொஞ்சம் பொறுங்கள் அவரும் வரட்டும்! படகில் நிறைய இடம் இருக்கிறதே! ஏற்றிக் கொண்டு போகலாம்!" என்றான்.

ஆழ்வார்க்கடியானிடமிருந்து நேற்றிரவு நிகழ்ச்சிகளைப் பற்றிப் பல விடயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வந்தியத்தேவன் விரும்பினான்.

### பத்தாம் அத்தியாயம்
### குடந்தை சோதிடர்

குடகு நாட்டில் பிறந்து வளர்ந்த பொன்னி நதி கன்னிப் பருவம் கடந்ததும் தன் மணாளனாகிய சமுத்திர ராஜனிடம் சென்றடைய விரும்பினாள். காடும் மேடும் கடந்து பாறைகளையும் பள்ளங்களையும் தாண்டிக் கொண்டு விரைந்து சென்றாள்.

சமுத்திர ராஜனை நெருங்க நெருங்க, நாயகனைக் காணப் போகிறோம் என்ற குதூகலத்தினால் அவள் உள்ளம் விம்மி உடல் பூரித்தது. இன்னும் சற்றுத் தூரம் சென்றாள், காதலனை அணைத்துக் கொள்ளக் கரங்கள் இரண்டு உண்டாயின. இரு கரங்களை விரித்தவாறு தாவிப் பாய்ந்து சென்றாள். ஆனால் உள்ளத்தில் பொங்கிய ஆர்வ மிகுதிக்கு இரு கரங்கள் போதுமென்று தோன்றவில்லை.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## அம்புலிமாமா

## நாட்டு நலன் எதில்

(நேற்றைய தொடர்ச்சி)

தேவசர்மா அந்தத் தோப்பிற்குப் போய் அங்கு போதையில் நினைவிழந்து கிடந்த பிசாசின் மகனை எழுப்பி நினைவிற்குக் கொண்டு வந்தார்.

அவர் அவனிடம் "உன் தந்தை உனக்கு ஒரு புதையலை விட்டுப் போயிருக்கிறார். அது கிடைத்தால் நீ என்ன செய்வாய்?" என்று கேட்டார்.

அவனும் "ஒரு பெரிய வீடு வாங்குவேன். பலவேலைக்காரர்களை வைத்துக் கொள்வேன். இஷ்டப்படி குடிப்பேன். இதுவரை என்னை கேலி செய்தவர்களைப் பழிவாங்குவேன். என் தந்தையின் படத்திற்கு மாலை போட்டு தினமும் பூசை செய்து வருவேன்" என்றான்.

பிசாசு உடனே தேவசர்மாவிடம் "இவனுக்கு என் பணத்தைக் கொடுத்தால் நான் திருப்தி அடைவேன்" எனக் கூறி புதையல் உள்ள இடத்தை தேவசர்மாவிடம் கூறியது. அவரும் அந்த மகனிடம் அதைக்கூறவே மறுநிமிடம் பிசாசு மறைந்து போய் விட்டது. தேவசர்மாதன் ஊருக்கு வந்து விட்டார்.



அவர் தம் மனைவியிடம் "பார்வதி புரி மன்னன் கேளிக் கைகளில் மூழ்க்கிக் கிடப்பவன் அரசாங்க ஊழியர்கள் ஊழல் புரிபவர்கள் மக்களும் பிறரைப் பற்றிக் கவலைப்படாமல் தன்னலம் கருதியே வாழ்கிறார்கள்.

அவ்வூர் பிசாசு கூட என் வீடு என் மகன் என்றுதான் எண்ணுகிறது. அங்கு யாருக்குப் பணம் கிடைத்தாலும் அது பிறருக்குப் பயன் படாது. இந்த நிலையில் எவ்வளவு நல்ல திட்டங்களை அந் நாட்டிற்குக் கொடுத்தாலும் அது அவற்றை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடிகிறதில்லை. தனிப்பட்டவர்களே அவற்றால் பயன் அடைகிறார்கள். இப்படி சுயநலம் கொண்டவர்களாக நிறைந்துள்ள நாடு எப்படி நம் நாட்டைப் போல வளமுள்ளதாக ஆக முடியும்?" என்றார்.

அவரது மனைவியும் "ஆமாம் எந்த ஒரு நாட்டில் சுயநலம் தலை தூக்கி விடுகிறதோ அங்கு எல்லாமே தாறு மாறாகத் தான் இருக்கும். மன்னன் ஆட்சி யில் கவனம் செலுத்தா மல் இருந்தால் அதி காரிகள் லஞ்சம் வாங்குவார்கள் இப்படிப் பட்ட நாடு எப்படியும் முன்னேற முடியாது தான்" என்றாள்.

தேவசர்மாவின் இக் கருத்துக்கள் பார்வதிபுரிக்கும் எட்டி விட்டது. அங்கு விழிப்புணர்வு ஏற்பட்டது. மக்களும் மன்னனும் தன்னலம் கருதாமல் செயற்படவே அந் நாடும் துர்க்காபுரிக்குச் சமமாய் வளமுள்ள நாடாகி விட்டது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கள் மகத்தான பணியைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை வையுங்கள்.
– விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## க.பொ.த சாதாரண தரத்தில் றிப்பீற் வகுப்புக்களை நடத்துங்கள்

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகியிருந்தன.

அவற்றின் பகுப்பாய்வுகள் நடந்து கொண்டிருக்கின்ற இந்தவேளையில், சித்தியடைந்த மாணவர்கள் க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்பர்.

அதிலும் சரியான பாடத் தெரிவை மேற்கொள்ளாதவிடத்து அந்த மாணவர்களின் எதிர்காலமும் இடர்நிறைந்ததாகிவிடும்.

இது ஒருபுறமிருக்க, இப்போது நம் கவனம் எல்லாம் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடையத் தவறிய மாணவர்கள் பற்றியதாக இருக்க வேண்டும்.

பொதுவில் க.பொ.த சாதாரண தரத்தைப் பொறுத்தவரை குறித்த பரீட்சையில் முதற் தடவையில் சித்தியடையத் தவறிய மாணவர்களைப் பாடசாலைகள் கைவிட்டு விடுகின்றன.

இது மிகப்பெரும் துரதிர்ஷ்ட நிலையாகும்.

முன்பெல்லாம் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய மாணவர்கள் மீளவும் அதே பாடசாலையில் கல்வி கற்று இரண்டாவது தடவை பரீட்சைக்குத் தோற்ற வாய்ப்பளிக்கப்படும்.

இவ்வாறு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டதன் காரணமாக, அநேக மாணவர்கள் இரண்டாவது தடவை சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி மிக உச்சமான பெறுபேறுகளைப் பெற்று உயர்தரம் கற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

தவிர, சாதாரண தரத்தில் இரண்டாவது தடவையும் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்ளை மாணவர்களுக்கு வழங்கும்போது அவர்கள் பாடசாலையின் கண்காணிப்பில் இருப்பதுடன் விளையாட்டுப் போட்டிகளிலும் இதர இணை பாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபட்டுத் தங்களின் ஆளுமையை விருத்தி செய்யக்கூடிய சந்தர்ப்பத்தையும் பெற்றுக் கொள்கின்றனர்.

எனினும் இத்தகைய வாய்ப்புகள் இப்போது இல்லாததன் காரணமாக சாதாரண தரப் பரீட்சையானது சித்தியடையத் தவறிய மாணவர்களைப் பாடசாலைகளில் இருந்து வெளியேற்றுவதற்கான பரீட்சையாக மாறியுள்ளது.

இந்தநிலைமை எங்கள் இளம் பிள்ளைகளை சந்திக்குக் கொண்டு வந்துவிடுகிறது.

எனவே சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய மாணவர்கள் இரண்டாவது தடவையும் பாடசாலையில் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பத்தை எமது கல்விச் சமூகம் வழங்க வேண்டும்.

கூடவே இந்த மாணவர்களுக்கு விசேட வகுப்புக்களை நடத்தி அவர்களைப் பரீட்சையில் சித்தியடைய வைப்பதற்கான ஏற்பாடுகளை மக்கள் சமூகம் செய்யுமாயின் அதை விட்ட பெரும் புண்ணியம் வேறு எதுவுமில்லை.

இதன்மூலம் அந்த மாணவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைவதுடன் எமது பாடசாலைகளிலும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடையாமல் பாதுகாக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் ஏற்படும்.

எனவே இது விடயத்தில் கல்வி நிர்வாகத்தின் உயர் அதிகாரிகள் கருசனை கொள்வதுடன் பாடசாலை அதிபர்கள் தற்துணிவுடன் றிப்பீற் வகுப்புக்களை நடத்த முன்வர வேண்டும்.

# சீனா ராஜபக்ஷக்களின் நண்பன் இலங்கையின் நட்பு நாடில்லை

## பாராளுமன்றில் சாணக்கியன்

(கொழும்பு)

சீனா, இலங்கைக்கு நன்மை தரும் வகையில் எதனை செய்துள்ளது என்று பாராளுமன்றில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இந்தக் கேள்வியை நேற்று எழுப்பினார்.

இலங்கையை, சீனா கடன் பொறிக்குள் தள்ளவில்லை என்று வெளியுறவுத்துறை அமைச்சர் அலி சாப்ரி கூறியதை அடுத்து, அதற்கு சீன தூதரகத்தின் பேச்சாளர் நன்றி தெரிவித்திருந்தார்.

இதனை நேற்று தமது பாராளுமன்ற உரையின்போது விமர்சித்த சாணக்கியன், சீனா, இலங்கைக்கு நன்மை செய்யவில்லை. தமது நாட்டின் நலனுக்காகவே அது இலங்கையை பயன்படுத்தி வருகிறது என்று குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கே சீனா நண்பராக இருக்க முடியும். இலங்கைக்கு நண்பர் அல்ல.

மகிந்த ராஜபக்ஷவுக்கு நண்பர் என்பதால், கோட்டாபயவின் சட்டத்தரணியான அலி சாப்ரியும் சீனாவை நண்பர் என்று கூறியுள்ளதாக சாணக்கியன் குறிப்பிட்டார்.

அவ்வாறு நண்பராக இருக்குமாக இருந்தால், ஏன் சீனா, சர்வதேச நாணய நிதிய மறுசீரமைப்பு திட்டத்துக்கு இன்னும் உடன்படவில்லை என்று சாணக்கியன் கேள்வி எழுப்பினார்.

ஜெனீவாவின் மனித உரிமைகள் பேரவையில் சீனா,இலங்கைக்கு ஆதரவு வழங்குதைக் கொண்டு அதனை நண்பராகக் கருதமுடியாது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளமை காரணமாகவே அதற்கு எதிராக ஜெனீவாவில் சர்வதேச நாடுகள் யோசனையை முன்வைத்தன.

இந்தநில்லையில் இலங்கைக்கு ஆதரவு வழங்கிய சீனாவும் மனித உரிமைகள் மதிக்கும் நாடு அல்ல. அங்கு உய்குர் இன மக்களுக்கு எதிராக பாரிய மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் சாணயக்கியன் குறிப்பிட்டார். (ம-7)

## டிசம்பர் 15 வரை மின்வெட்டு தொடரும் சுற்றுலா வலயங்களில் இரவு வேளையில் மின்வெட்டு இல்லை

(கொழும்பு)

தெற்கு மற்றும் எல்ல சுற்றுலா வலயங்களில் டிசம்பர் முதலாம் திகதியிலிருந்து இரவு வேளையில் மின்வெட்டு அமுல்படுத்தப்படாதென மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இதனிடையே, நாடளாவிய ரீதியில் பகல் வேளையில் ஒரு மணித்தியாலமும் இரவு வேளையில் ஒரு மணித்தியாலம் 20 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படுமென அவர் கூறினார்.

டிசம்பர் 15 ஆம் திகதி வரை மின்வெட்டு அமுல்படுத்தப்படுமெனவும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

எவ்வாறாயினும், மின்வெட்டுக்கான அனுமதி (நவம்பர் 30 ஆம் திகதி) வரை மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க கூறினார்.

அதற்கு பின்னரான காலத்தில் மின்வெட்டை அமுல்படுத்த அனுமதி இன்னும் வழங்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-7)

## தெல்லிப்பளை கிழக்கு பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண் ஒருவர் கைது

தெல்லிப்பளை கிழக்குப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்ட பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெல்லிப்பளை குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

உப பொலிஸ் பரிசோதகர் முருகேசன் பிள்ளை கலாவினோதன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இந்த முற்றுகை நடவடிக்கைக்ளை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது 8,250 மில்லி லீற்றர் கசிப்பு, 150,000 மில்லி லீற்றர் கோடா என்பன கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த பெண் வீட்டின் பின்புறத்தில் மிகவும் சூட்சுமமான முறையில் மண்ணுக்குள் புதைக்கப்பட்ட நிலையில் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான பெண்ணை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## புடைவை விற்பனை நிலையத்தில் இளம் தம்பதிகள் மீது வாள்வெட்டு

### கணவன் பலி; மனைவி படுகாயம்

(கொழும்பு)

புடைவை விற்பனை நிலையத்திற்குள் புகுந்த கும்பல் ஒன்று தம்பதிகள் மீது நடத்திய வாள்வெட்டு தாக்குதலில் கணவன் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் மனைவி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

குறித்த சம்பவம் ஹிக்கடுவ பகுதியில் நேற்று காலை இடம்பெற்றிருக்கின்றது.

படுகாயமடைந்த பெண் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவவதாக கூறப்படும் நிலையில் சம்பவத்தில் 29 வயதுடைய கணவன் உயிரிழந்துள்ளார்.

மேலும் காரில் வந்த இருவரே இந்தத் தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறநிலையில் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில் கச்சேரி, புதிய கச்சேரியின் முன்வளாகத்தடி, திருநகர், வானவில் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** பண்டாரிக்குளம் ஆகிய இடத்திலும் **மன்னார் பிரதேசத்தில்** புதுக் [illegible] கிராமம். ஆகிய இடத்திலும் மின்சாரம் தடைப்படும்.

## ஒரு இலட்சம் சிலிண்டர்கள் நாடு முழுவதும் விநியோகம்

### லிட்ரோ நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு இலட்சம் லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இன்று நாடு முழுவதும் விநியோகிக்கப்படவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

நேற்று 6,000 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கியக் கப்பல் ஒன்று துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

அதிலிருந்து எரிவாயுவைத் தரையிறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கியமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு இல்லை

## சுகாதார அமைச்சர்



(கொழும்பு)

அத்தியாவசியமான 14 மருந்துகளின் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்காக சீனாவினால் வழங்கப்பட்ட 28 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையைப் பயன்படுத்தியிருப்பதாக சுகாதார அமைச்சர் கெஹலியரம்புக்வெல தெரிவித்தார்.

நாட்டில் தற்பொழுது மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதாக வெளியாகும் வதந்திகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியிட்ட கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். சுகாதாரத் துறையின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக இந்தியக் கடன் உதவியின் கீழ் கிடைக்கப்பெற்ற 200 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளமை குறித்தும் அமைச்சர் மேலும் விளக்கமளித்தார்.

இந்த 200 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேலதிகமாக இந்தியாவிலிருந்து கிடைத்த 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியில் எஞ்சியுள்ள 35 மில்லியன் அமெரிக்க டொலர் களையும் ஒதுக்குவதற்கு அமை ச்சரவை அங்கீகாரம் வழங்கியி ருப்பதாக அமைச்சர் குறிப் பிட்டார். (நி)

# மாகாண சபைகள் கலைப்பு; உண்மைக்கு புறம்பானது

## ஜனாதிபதி ஊடகப் பிரிவு விளக்கம்

(கொழும்பு)

மாகாண சபைகளுக்குப் பதிலாக மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை ஸ்தாபிக்க ஜனாதிபதி தயாராகி வருவதாக வெளியாகும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்த பதில், அர்த்தத்தை சிதைக்கும் விதத்தில் செய்திகளாக வெளியாகியுள்ளன என அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

எனினும் 2023 ஆம் நிதியாண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில், பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேனவின் கருத்துக்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாகாண சபைகளில் மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை ஸ்தாபிக்கத் தயார் எனத் தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது தவிர மாகாண சபைகள் கலைப்பு தொடர்பாக ஜனாதிபதி எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (நி)

# பெறுகை அறிவித்தல்

## சபைநிதி வேலைத்திட்டம்-2022

### வேலணை பிரதேச சபை

**வீதி விளக்கு கொள்வனவு செய்தல்** **ஒப்பந்த இல:**-NP/14/41(18)/2/Council/2022/14

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு வேலணை பிரதேச சபை நிதியின் ஒரு பகுதியினை கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், பிரதேச பெறுகைக்குழு, வேலணைப்பிரதேச சபை, வங்களாவடி வேலணை. தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள்,கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணத்தில் பகுதி 5 (Schedule) இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தவிசாளர்/ செயலாளர், வேலணைப் பிரதேச சபை** (தொலைபேசி: **021 221 1505**, தொலைநகல்: **021 221 1506, மின்னஞ்சல்**- velanaips@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் **2022.12.01** ஆம் திகதியில் இருந்து **2022.12.14** ஆம் திகதி வரையான காலப்பகுதியில் **வேலை நாட்களில் காலை 09.00** மணிமுதல் மாலை **14.00 மணி வரை** கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் **தவிசாளர்/செயலாளர்,வேலணைப் பிரதேச சபை,வேலணை** எனும் இடத்திலிருந்து **2022.12.01** ஆம் திகதியிலிருந்து **2022.12.14** வரை காலை **09.00** மணிக்கும் **14.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா.1,500.00(வரி நீங்கலாக)** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

07. கேள்விகள் இரு பிரதிகளில் (மூலப்பிரதி,பிரதி) தயாரிக்கப்பட்டு **தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழு, வேலணைப் பிரதேச சபை வேலணை** எனும் முகவரிக்கு **2022.12.15 ஆம் திகதி பிற்பகல் 14.30 மணிக்கு முன்பதாக** கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்வி இலக்கம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்விகோரல் பற்றியமுன் கூட்டிய கூட்டம் **2022.12.08** ஆம் திகதி மு.ப. **10.30** மணிக்கு வேலணை பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

| கேள்விஎண் | வேலைவிபரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) (WITH OUTVAT) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு சமா்ப்பித்த இறுதி திகதியில் இருந்து செல்லுபடியாகும் காலம் | பிணைவைப்பு (ரு) | |
| | | | | | செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு தொகை | செல்லுபடி யாகும் காலம் |
| NP/14/41(18)/2/ Council/2022/14 | 30W LED வீதி விளக்குகளை கொள்வனவு செய்தல் | 2.5 | 14 நாட்கள் | அங்கீகரிக்கப் பட்ட நிறுவனம் | 63 நாட்கள் | 25,000.00 | 17.03.2023 |

தலைவர்,
உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,
வேலணை பிரதேசசபை,வங்களாவடி.
2022.12.01

(சி-5377)

# மேலும் வரி விதிப்பது நிலைமையை மோசமாக்கும்



(கொழும்பு)

இலங்கையில் நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு ஒரு மாதத்திற்கு சத்தான உணவை உண்பதற்கு ஒரு இலட்சம் அல்லது ஒன்றரை இலட்சம் ரூபாய் தேவைப்படுகின்றது.

ஆகவே எத்தனை குடும்பங்களுக்கு இவ்வாறான வருமானம் கிடைக்கின்றது என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய கேள்வி எழுப்பியுள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரவுகளை சுட்டிக்காட்டி பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

ஒரு இலட்சம் ரூபாய் வருமானம் பெறுபவர்களுக்கு 2023 ஆம் ஆண்டு வரவு -செலவுத் திட்டத்தின் ஊடாக வரி விதிக்கும் யோசனை எதிர்காலத்தில் நிலைமையை மோசமாக்கும் என்றும் எச்சரித்துள்ளார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 300 | 220 | 250 |
| உருளைக்கிழங்கு | 170 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 200 | 200 |
| தக்காளி | 260 | 300 | 280 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 180 | 200 |
| கோவா | 250 | 240 | 280 | 300 |
| கரட் | 300 | 450 | 450 | 500 |
| பூசணி | 100 | 140 | 120 | 120 |
| புடோல் | 250 | 260 | 180 | 250 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 650 | 650 | 600 | 700 |
| பெரிய வெங்காயம் | 300 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 600 | 500 | 450 | 600 |
| வெண்டக்காய் | 120 | 120 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 200 | 350 | 200 | 300 |
| லீக்ஸ் | 400 | 350 | 440 | 500 |
| பீற்றூட் | 400 | 300 | 400 | 450 |
| கறிமிளகாய் | 700 | 800 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 800 | 800 |
| போஞ்சி | 300 | 300 | 350 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 250 | — | 200 |
| கீரை - 1 பிடி | 160 | 150 | 200 | 200 |
| தேசிக்காய் | 300 | 200 | 240 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 60 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 300 | 250 | 300 |
| வெங்காயப்பூ | — | 400 | 400 | — |
| முள்ளங்கி | 200 | 120 | 160 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 120 | 80 |
| வல்லாரை | 50 | 50 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | 150 | 120 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் 7...

றுள்ள வெளிநாடுகளுக்கு சென்று வந்தவர்கள் எனவும் அவர்களுக்குரிய சிகிச்சைகள் உரிய முறையில் வழங் கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-7,33)

## முட்டை விலை...

யாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

செய்தியாளர்களிடம் பேசிய அதன் உறுப்பினர் ஏ.டி. ஹர்ஷா கூறியதாவது,

"இனி வரும் மாதங்களில், அரசு தலையிடாவிட்டால் ஒரு முட்டை 75 ரூபாயாக உயரும். இங்கே ஒரு மாபியா இருக்கிறது."

இதேவேளை கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ள பின்னணியில் இவ் வாறான விலை அதிகரிப்பு இடம் பெற முடியாது என வர்த்தக மற்றும் உண வுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் கிறிஸ்து மஸ் காலத்தில் தட்டுப்பாடு இன்றி முட்டைகளை விநியோகிக்க முடியும் என அகில இலங்கை முட்டை உற் பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள் ளது. (ம-7)


NLB
தேசிய லொத்தர் சபையினால் சீட்டிழுக்கப்படும் NLB டொலர் ஃபோர்ச்சூன் லொத்தர் சீட்டு 2022 டிசம்பர் 09 ஆம் திகதி சீட்டிழுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.
நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக, சுப்பர் பரிசான அமெரிக்க டொலர் 100,000 பணம் 2022.12.09 ஆம் திகதி அன்று நிலவும் அந்நியச் செலாவணி விகிதத்தில் இலங்கை ரூபாவில் வழங்கப்படும். (இலங்கை மத்திய வங்கியின் அனுமதியின் பேரில்) (C-1853)

தேவி வாசி — சீட்டிழுப்பு இலக்கம் 3197
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்: J 10 66 72 76
விசேட தங்கக்காசு வெற்றியிலக்கங்கள்: 1244340, 1516887, 2222316, 2080470, 1926110
இலட்சாதிபதி வெற்றியிலக்கம்: 06747
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 30/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1410
வெற்றி இலக்கங்கள்: மிதுனம் 4 6 9 9 9 1

தன நிதானய
திகதி - 2022.11.30
சீட்டிழுப்பு இலக்கம் - 985
D 38 62 64 70

மெகா பவர்
திகதி 30/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1303
S 15 04 07 56 64

ஹந்தஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.11.30
சீட்டிழுப்பு இலக்கம் 264
கன்னி 17 41 50 62 கன்னி

மஹஜன சம்பத
திகதி 2022/11/30
சீட்டிழுப்பு இலக்கம் 4955
Y 0 1 8 3 0 4


## ஆடை தொடர்...

வறுத்தல் வழங்கும் வகையில் 2019 ஜூன் 26 மற்றும் 2022 செப்ரெம்பர் 27 ஆகிய திகதிகளில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் இரத்து செய்யப்பட் டுள்ளன.

கடந்த 28ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாக பொது நிர் வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச் சின் செயலாளர் எம்.பி.கே.மாயா துன்னவின் கையொப்பத்துடன் வெளி யிடப்பட்டுள்ள புதிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுற்றறிக்கையின் அடிப்படையில் அண்மையில் ஆசிரியர்கள் சிலர் இலகு ஆடைகளை அணிந்து பாட சாலைகளுக்கு வந்ததையடுத்து, பின் னர் இது தொடர்பில் சமூகத்தில் பல விவாதங்கள் எழுந்திருந்தன. (ம-7)

## நான்கு அத்தியா...

கப்படவுள்ளன.

ஒரு கிலோ கிராம் நெத்தலி கரு வாடு 1150 ரூபாய்க்கும் சிவப்பு பச்சை அரிசி 199 ரூபாய்க்கும் கீரிச் சம்பா 225 ரூபாய்க்கும் பெரிய வெங்காயம் 225 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட வுள்ளன. (ம-7)

## புலோலியில்...

தென்மேற்கு, கம்பாவத்தையைச் சேர்ந்த மாணிக்கம் நடராசா (வயது- 64) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று புதன்கிழமை அதிகாலை வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பருத் தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணை களை மேற்கொண்டு சடலத்தை உற வினரிடம் கையளிக்குமாறு உத்தர விட்டார். (ம-7,60)

## 2023ஆம்...

சபையின் மேலதிக பொது முகாமை யாளர் ரொஹான் செனவிரத்ன தெரி வித்தார்.

மின்சாரத் துறையில் உள்ள பிரச் சினைகளைத் தீர்ப்பதற்கான முன் மொழிவுகளைப் பெறுவதற்காக மின் துறையுடன் தொடர்புடைய அரச பிரதி நிதிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் குழுவின் முன் அழைக்கப்பட்டன. இழப்பை ஈடுகட்ட மின் கட்டணத்தை 70% உயர்த்த வேண்டும் என இலங்கை மின்சார சபை அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். (ம-7)

## இலங்கைக்கான...

மணியளவில் விஜயம் செய்த பிரித் தானியத் தூதுவர் இச்சந்திப்பில் ஈடுபட்டார்.

இதன்போது யாழ்.மாநகர ஆணை யாளர் இ.த.ஜெயசீலனும் உடனிருந் தார். (ம-7,33,104)

## தமிழ்த் தரப்புகள்...

என குறிப்பிடும் நிலையை தமிழ் தரப்பு தோற்றுவிக்க கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை இடம்பெற்ற 2023 ஆம் ஆண் டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் கைத்தொழில், வர்த்தக, வாணிப மற் றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு மற் றும் பெருந்தோட்டத்துறை அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகை யில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண் பது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால அவரது ஆட்சிக்காலத் தில் அவதானம்செலுத்தாமல் தற்போது மாவட்ட அபிவிருத்தி சபை ஊடாக தீர்வு வழங்க வேண்டும் என குறிப்பிடுகிறார்.

அதற்கு சார்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதிலளித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது அரசியல் தீர்வு வழங்க தயார் என குறிப்பிட்டார். பிர தான எதிர்க்கட்சி களின் உறுப்பினர் களை எழுப்பி தீர்வு வழங்க தயாரா என கேள்வி எழுப்பினார்.

பிரதான எதிர்க் கட்சிகள் இணக் கம் தெரிவித்தன. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 13 பிளஸ் என குறிப்பிட்டார்.

சமஷ்டி அடிப் படையில் அரசி யல் தீர்வு வழங் கப்படும் என எதிர்பார்க்கப்பட் டுள்ள நிலையில் தோல்வியடைந்த மாவட்ட அபி விருத்திக் குழு பற்றி தற்போது குறிப்பிடப்படு கிறது.

தோல்விய டைந்த இந்த திட் டத்தின் ஊடா கவா அரசியல் பிரச்சினைக்கு தீர்வு என்பது கவ லைக்குரியதாக உள்ளது.

சமஷ்டி முறை யிலான தீர்வு விட யத்தில் தமிழ் தரப்புகள் முத லில் ஒற்றுமையு டன் செயற்பட வேண்டும். தீர்வு விவகாரத்தில் தமிழ் தரப்புகள் மத்தியில் ஒரு மித்த நிலைப் பாடு இல்லை, ஆகவே தீர்வு கைநழுவி சென்று விட் டது என ஆட்சியாளர்கள் குறிப்பிடும் நிலையை தோற்றுவிக்க வேண்டாம் என்பதை தமிழ் தரப்பினரிடம் கேட்டுக் கொள்கிறேன் என்றார். (ம-7)

## நிபந்தனையின்றி...

சமஷ்டி அடிப்படையிலான தீர்வை நிபந்தனையாக முன்வைத்தே இனப் பிரச்சினை தீர்வு பேச்சுக்கு செல்ல வேண்டும் என கஜேந்திரகுமார் பொன் னம்பலம் கோரிக்கை முன்வைப் பதற்கு முன்பதாகவே இது தொடர்பில் இரா.சம்பந்தனுக்கு தாம் கடித மொன்றை அனுப்பியதாக கூட்டணி யின் தலைவரும் முன்னாள் நீதியரசரு மான சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட் டுள்ளார்.

எனினும் தேசிய இனப்பிரச்சி னைத் தீர்வுக்கான பேச்சு ஆரம்ப மாவதற்கு முன்னரே நிபந்தனைகளை தமிழர் தரப்பு விதிக்கக் கூடாது என வும், முதலில் பேச்சு மேசைக்கு வாருங் கள் எனவும் அதிபர் ரணில் விக்கிரம சிங்க தமிழ் அரசியல் தரப்புக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வரவு - செலவுத் திட்ட விவாதம் முடிவடைந்த பின்னர் இனப்பிரச் சினை தீர்வு தொடர்பில் சர்வகட்சி கூட் டம் நடத்தப்படும் என பாராளுமன்றில் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்த நிலையில், தமிழ் தேசியக் கட்சிகள் சில நிபந்தனைகளை விதித்துள்ளன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1930 | நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.30 | தினம் புதன்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,809,760/-
C 13 14 55 68
ரூ.500/- பரிசுகளுக்கான 8452 | ரூ.100/- பரிசுகளுக்கான 651

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.11.30
சீட்டிழுப்பு இல : 4091
வர்ணம் : ஊதா
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,821,640/-
வெற்றி இலக்கங்கள்: 32 54 56 72 P

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,452,060.80
திகதி 2022-11-30
வெற்றி வாரம் 3642
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள்: 03 14 24 61 மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,290,780/-

வசனா சம்பத
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்: H 12 12 43 50 74
சீட்டிழுப்பு வாரம் 1106 | வர்ணம் பச்சை | 2022.11.30 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 281,782,883.80
Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1875 | சீட்டிழுப்பு திகதி 2022-11-30
வெற்றி இலக்கங்கள்: 13 15 35 70 X
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 37,565,920/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1756
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2022.11.30
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,146,860/-
வெற்றி இலக்கங்கள்: 03 14 25 46 E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் வாங்கி மகிழ்ச்சியாக இருக்க ஜனாதிபதி நினைக்கின்றார்

## சபையில் விமல் வீரவன்ச

நாட்டில் உள்ள ஏதாவது ஒன்றை விற்று கையிருப்பில் மூன்று அல்லது நான்கு பில்லியன் பணத்தை போட்டுக்கொண்டு தரப்படுத்தலில் மேல் நோக்கி வந்த பின்னர் கடனை வாங்கி சாப்பிட்டு மகிழ்ச்சியாக இருக்கலாம் என தற்போதைய ஜனாதிபதி நினைப்பதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இந்த சூத்திரத்தின் மூலம் முன்நோக்கி செல்ல முடியாது. இலங்கை மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சு என்பன தனித் தனியாக நிதி முகாமைத்துவம் தொடர்பான தீர்மானங்களை எடுக்கின்றன.

கைத்தொழிலாளர்களை பாதுகாப்பதன் மூலமே நிதி கட்டமைப்பை பாதுகாத்துக்கொள்ள முடியும். வட்டி வீதம் அதிகரித்துள்ளதால், கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை பாதுகாப்பதிலேயே நாட்டின் நிதி கட்டமைப்பின் பாதுகாப்பு தங்கியுள்ளது. தவறான நிதி முகாமைத்துவ கொள்கையில் இருந்து விடுபடும் வரை இலங்கையை கைத்தொழில் துறை நோக்கி கொண்டு செல்ல முடியாது எனவும் விமல் வீரவன்ச கூறியுள்ளார். (ம-7)

# பயன்படுத்தப்படாத காணிகள் சுவீகரிக்கப்படும்

## அமைச்சர் ரமேஷ் பத்திரன

(கொழும்பு)

பெரும் தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத காணிகளை சுவீகரிக்கும் யோசனை அமைச்சரவையில் சமர்பிக்கப்படவுள்ளது.

பெருந்தோட்டக் கைத்தொழில்கள் தொடர்பான அமைச்சர்களின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் ரமேஷ் பத்திரன இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமென பெருந்தோட்ட அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன தெரிவித்தார். (ம-7)

# கருவுறுத்தல் விழிப்புணர்வு மற்றும் நூல் வெளியீடு

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட சத்திரசிகிச்சைத் துறையும் பெண்நோயியல் மற்றும் மகப்பேற்றுத் துறையும் இணைந்து வழங்கும் கருவுறுத்தல் விழிப்புணர்வு தினம் மற்றும் நூல்வெளியீட்டு நிகழ்வானது நாளை 02.12.2022 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 4.00 மணிவரை யாழ். பல்கலையின் மருத்துவபீடத்தில் அமைந்துள்ள கூவர் அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சற்குணராசா பிரதம்விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளதுடன் விழாவிற்கான ஆசியுரையை கலாநிதி ஆறு. திருமுருகனும் வழங்கவுள்ளார்.

இந் நிகழ்வின் முக்கிய அங்கமான "குழந்தையின்மை - விளக்கங்களும் தீர்வுகளும்" நூல் வெளியீடு மற்றும் நூல் ஆய்வுரையினை யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீட பேராசிரியர் ச. கண்ணதாசன் ஆற்றவுள்ளார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13630)

076 825 7716 (ஆகாஸ்)



பயிற்சியுடன் உடனடி **வேலை வாய்ப்பு**

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS (C-5382)

● பயிற்சிக்கால கைக்கந்தொகை - 30,000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777



**A/L 2024**

கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
ஆரம்பம்
03.12.2022 காலை - 8.00 மணி
COMMERCE STREAM
ENGLISH MEDIUM

ACC - D.Sam
B.ST - T.S. Richi
ECO - P.Ajanthan

(13634) DMI JAFFNA



**சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்**

துனாவுக்கு சுற்றுலா விசா தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

Hybrid International Hub (pvt) LTD

076 250 0098 (C-5380)



**உடனடி வேலை வாய்ப்புக்கள்**

EXECUTIVE OFFICER

✔ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
✔ வயது - 22 தொடக்கம் 35
✔ தகுதி - பட்டதாரிகள்

V2 TRAVELS (C-5382)

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777



**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும்**



அன்னை மடியில் 05 . 05 . 1969

ஆண்டவன் அடியில் 01 . 11 . 2022

கடந்த 01.11.2022 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த

**அமரர் செல்வராஜா ரமேஷ்**

(உள்ளூராட்சி உதவியாளர், JP)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 01.12.2022 இன்று கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் 03.12.2022 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.

04.12.2022 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு நேரில் வந்து துயரில் கலந்து கொண்டோர்க்கும், தொலைபேசி அழைப்பு மூலம் அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் குடும்பத்தினர் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (13635)

'ஹேமா இல்லம்'
சோமசுந்தரப்புலவர் வீதி,
நவாலி வடக்கு மானிப்பாய்.

077 522 6462

தகவல்: குடும்பத்தினர்



**C.C.A**
சுன்னாகம்
A/L 2024 வர்த்தகம்
கணக்கீடு - S.தவா
வணிகம் - N.S.கபில்
பொருளியல் - M.விஜிதன்
ஆரம்பம் டிசம்பர் - 03 காலை 9.00 மணி (13613)



**நாவலர்** கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
கலை வர்த்தகம்
A/L 2024
புதிய பிரிவுகள் ஆரம்பம்
03.12.2022 சனி காலை 09 மணி
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (13631)
அலுவலக தொடர்பு - 076 166 1986



**NEC** - யாழ் நகர்
பெருமாள் கோவில் அருகில்
கலை வர்த்தகம்
A/L 2024
புதிய பிரிவுகள் ஆரம்பம்
03.12.2022 சனி காலை 08 மணி
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (13631)
அலுவலக தொடர்பு - 076 535 0999



**வேலையாட்கள் தேவை**
யாழ்ப்பாணத்தை தளமாக கொண்டு இயங்கும் Digital marketing நிறுவனம் ஒன்றிற்கு
- Graphic Designers (Full time)
- Digital content creators
- Video Editors (part time)

அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு (13628)
077 863 0888



**D.C.M**
யாழ். நகர்
(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அருகாமை)
புதிய பிரிவுகள் A/L 2024
கலை, வர்த்தக வகுப்புக்கள் (C-5381)
03.12.2022 சனிக்கிழமை காலை 8.00 மணி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.